பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 22 திங்கட்கிழமை 06.01.2025 கதிர் 060

## இனி இது ரகசியம் அல்ல!

நேற்றுக் காலையில் வெளிநாடொன்றில் இருந்து வாசகர் ஒருவர்அழைப்பெடுத்தார். தாயகத்தில் நடக்கும் ஈழத் தமிழ் அரசியலை ஊன்றிக் கவனித்துவருபவர் ☞ 2

# தமிழினப் படுகொலையாளிகளை பொறுப்புக்கூற வைக்கவேண்டும்

## கனேடிய கன்சர்வேட்டி கட்சித் தலைவர் வலியுறுத்து

தமிழ் இனப்படுகொலைக் குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் கனேடிய கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் பியெர் பொய்லிவர்.

கனடாவில் ஜனவரி மாதம் அவர் தமிழர் மரபுரிமைமாதமாகக் கொண்டாடப்படுகின்றது. அதனை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாம் ஜனவரி மாதம் முழுவதும் கடும் உழைப்பாளிகளைக் கொண்டாடுகின்றோம். கனடாவில் வாழும் தமிழர்கள் அவர்களது



வரலாற்றுப் பாரம்பரியத்துடன் நெருங்கிய பிணைப்பைக் கொண்டிருக்கும் அதேவேளை, பல தசாப்தகாலமாக எமது சமூகத்தின் ☞ 2

## 2025இல் 3 மில்லியன் சுற்றுலாவிகளுக்கு இலக்கு

2025ஆம் ஆண்டில் மூன்று மில்லியன்சுற்றுலாவிகளைஇலங்கைக்கு அழைத்து வருவதே ஆளும்தரப்பின் திட்டம் என்று அயலுறவு, சுற்றுலாத்துறை மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

அவர், பெந்தொட்டை பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஆயுர்வேத நிலையத்தைச் சனிக்கிழமை தொடக்கி வைத்து உரையாற்றியபோது இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின சுற்றுலாத்துறை வேகமாக முன்னேறிச் செல்கிறது. 2024 ☞ 8

## பிறப்பு வீதம் கடும் வீழ்ச்சி

கடந்த 11 வருடங்களில் இலங்கையின் பிறப்பு வீதத்தில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பணிப்பாளர் நாயகம் அனோஜா செனவிரத்னவின் கூற்றுப்படி, 2013இல் 3 லட்சத்து 52 ஆயிரத்து 450 பிறப்புகள் பதிவாகியுள்ளன, ஆனால் இந்த ☞ 2

## வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள மேலதிகங்களை அகற்ற அவகாசம்

### ஜனவரி 19இன் பின் சட்ட நடவடிக்கை

வாகனங்களில் சட்டவிரோதமாகச் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள் அனைத்தையும் உடன் நீக்கும்படி பொலிஸார் அறிவித்துள்ளனர். ஜனவரி 19 வரை இதற்கான காலக்கெடு வழங்கப்பட்டுள்ளது.

வாகனங்களில் இருப்பதற்கு மேலதிகமாகப் பொருத்தப்பட்டுள்ள வண்ண விளக்குகள், உரத்த ஹாரன்கள், சத்தமில்லாத புகைபோக்கிகள்(சைலன்சர்கள்)போன்ற சட்டவிரோதமாகப் பொருத்தப்பட்டுள்ள அனைத்தும் அகற்றப்படவேண்டும் என்று பொலிஸார் அறிவித்துள்ளனர்.

வாகனங்களில் சட்டவிரோதமாகப் பொருத்தப்படும் தேவையற்ற விடயங்களால் விபத்துக்கள் ஏற்படுவதைத்தவிர்க்கும்நோக்கத்துடன் பொலிஸார் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளனர். இனிவரும் ☞ 2

## யானையின் உடலை வெட்டி வீசிய ராணுவச் சிப்பாய்கள் மூவர் கைது

இராணுவமுகாமில்இறந்தயானையை துண்டு துண்டாக வெட்டி குளத்தில் வீசினார்கள் என்ற குற்றச்சாட்டில் வவுனியாவில் இராணுவத்தினர் மூவர் வனஉயிரிகள்திணைக்களஅதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.


வவுனியா மாவட்டம் ஓமந்தை, கொம்புவைத்தகுளம் இராணுவ முகாமில் மின்சாரம் தாக்கி இறந்ததாகக் கூறப்படும் யானையை துண்டு துண்டாக வெட்டி குளத்தில் வீசினார்கள் என்று இந்த மூவர் மீதும் குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டுள்ளது.

இராணுவ முகாமில் மின்சாரம் தாக்கி யானை இறந்தது கடந்த மாதம் இடம்பெற்றது என்று கூறப்படுகின்றது. யானையின் வெட்டப்பட்ட உடல்பாகங்கள் குளத்தில் காணப்படுவதாக பொதுமக்கள் செய்த முறைப்பாட்டை அடுத்து வன ☞ 8

## சுண்ணக்கல் அகழ்வுக்கு அதிகாரிகளே பொறுப்பு

### அமைச்சர் சந்திரசேகர் தெரிவித்தார்





அமைச்சர் சந்திரசேகர் நேற்று நேரில் சென்று பார்வையிட்டார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இடம்பெற்றுவரும் சுண்ணக்கல் அகழ்வின் விளைவுகளுக்குஅரச அதிகாரிகளே பொறுப்புக்கூறவேண்டும், அது விசாரணை முன்னெடுக்கப்படும் என்று கடற்றொழில் நீரியல் வள- அமைச்சர் சந்திரசேகர் தெரிவித்தார்.

தென்மராட்சியின் மந்துவில் பகுதியில் சுண்ணக்கல் அகழப்படுவதாகக் கூறப்படும் இடங்களை சரசாலை வடக்கில்சுண்ணக்கல்அகழப்படும் இடத்திற்கும் சென்று பார்த்தார்.

அமைச்சருடன் நாடாளுமன்ற உறுப்பினர் கணநாதன் இளங்குமரன் மற்றும் அதிகாரிகள் சிலரும் உடன் சென்றிருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் நிலக்கீழ் படையாகக் காணப்படும் சுண்ணக் கற்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டு வெளி மாவட்டங்களுக்கு ☞ 2

## உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 'சங்கு' கூட்டணி போட்டியிடும்

### நேற்றைய வவுனியா கூட்டத்தில் முடிவு

வரவிருக்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி 'சங்கு' சின்னத்தில் போட்டியிடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் இருக்கும் ஐந்து கட்சிகளும் சேர்ந்து போட்டியிடுவதுடன் வேறு கட்சிகளையும் சேர்த்துக்கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வவுனியா, கோவில்குளம்பகுதியில் உள்ள விருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்ற ஜனநாயகத் தமிழ் தேசியக்கூட்டணியின்நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. கூட்டணியின் பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் இது தொடர்பில் தெரிவித்ததாவது:

நடந்து முடிந்த தேர்தல் தொடர்பாக ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் நிறைவேற்றுக் ☞ 2

## யாழ். மக்கள் பயப்படத் தேவையில்லை என்கிறார் பிரதிப் பொலிஸ் மா அதிபர்



யாழ்ப்பாண மக்கள் பயப்படத் தேவையில்லை. பொதுமக்கள் அச்சமின்றி செயல்படவும் சட்டம் ஒழுங்கை நிறைவேற்றவும் பொலிஸார்தயாராகஇருக்கின்றார்கள் என யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மாஅதிபர்காளிங்க ☞ 2

## ஆட்சி மீது மக்கள் வெறுப்புக்கொள்ள முன் புதிய அரசமைப்பை உருவாக்கவேண்டும்

### சுரேஸ் பிரேமச்சந்திரன் வலியுறுத்து

தேசியமக்கள்சக்திவிரைவாகபுதிய அரசமைப்பை உருவாக்கவேண்டும். அப்போதுதான் அது சாத்தியமாகலாம். காலம் செல்ல ஆட்சியின் மீதும், ஆட்சி அதிகாரம் மீதும் பல்வேறு குறைகள் வரும். அதற்கு முன்பாக அரசமைப்பு வரவேண்டும் என விருப்புகின்றோம் என்றார் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூ-ட்டணியின் பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன்.

அவர் ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் வவுனியாவில் நேற்று இடம்பெற்றபின்னர்செய்தியாளர்களிடம் பேசியபோதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய ஆளும்தரப்பு ஒரு மாற்றத்தை உருவாக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறது. நிர்வாகத்தில் மாற்றம். அரசியலில் மாற்றம். ஊழல் இல்லாத நிர்வாகத்தை ஏற்படுத்துவது. என பல விடயங்கள் மேற்கொள்ளப்பட்டாலும் தமிழ் மக்களது தேசிய இனப்பிரச்சினையை தீர்க்கக்கூடிய மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என்பது எம் மக்களது கருத்தாக இருக்கிறது. அந்த அடிப்படையில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் ☞ 8

## வரிகளை நீக்காத ஆளும்தரப்புக்கு இப்போதே அழுத்தம் கொடுப்போம்

### மக்கள் போராட்ட அமைப்பு அழைப்பு

மக்களுக்கு சுமையாக இருக்கும் வரிகளை நீக்குவதாக தெரிவித்து அதிகாரத்துக்கு வந்த தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு தற்போது, ரணில் விக்ரமசிங்க விதித்த அனைத்து வரிகளையும் அவ்வாறே பேணுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. அதனால் மக்கள் தீர்வைப் பெறும் வகையில் ஆளும்தரப்புக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று மக்கள் போராட்ட அமைப்பின் நிறைவேற்று உறுப்பினர் துமிந்த நாகமுவ தெரிவித்தார்.

அவர் கொழும்பில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

விசேட வர்த்தக வரிகள் காரணமாக அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை பெருமளவில்அதிகரிக்கப்படுகிறது. அத்தியாவசியஉணவுப்பொருட்கள் மீதுவிதிக்கப்பட்டிருக்கும்வரிகளை நீக்குவதாக தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்புதேர்தல்மேடைகளில் வாக்குறுதி வழங்கி இருந்தது.

அதேபோன்று பாடசாலை உபகரணங்கள் மற்றும் அத்தியாவசியமருந்துப்பொருட்கள் மீதுவிதிக்கப்பட்டிருக்கும்வரிகளை நீக்குவதாகவும் தெரிவித்திருந்து.

வழங்கிய வாக்குறுதிகளுக்கு முற்றிலும் மாறான விடயங்களே தற்போது ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

அவர். நேற்றைய எனது பத்தியில் இருந்த இரண்டுவிடயங்களைஅவர்சுட்டிக்காட்டினார்.

முதலாவது புளொட் 'வெளிச்சவீட்டு' சின்னத்தில்தனித்துப்போட்டியிடுவதுகுறித்துச் சிந்திப்பதாகநான்எ-முதியதில்இருந்ததவறை அவர்சுட்டிக்காட்டினார். 'வெளிச்சவீடு' என்பது ரெலோவின் சின்னமே அன்றி புளொட்டின் சின்னமல்ல என்றார். ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி என்கிற புளொட்டின் பதிவுசெய்யப்பட்டஅரசியல்கட்சியின்சின்னம் 'நங்கூரம்' என்பதையும்நினைவுபடுத்தினார். அத்தோடு வழக்கிழந்துபோய்விட்ட, அந்தக் கட்சிகளாலேயே கைவிடப்பட்டுவிட்ட இந்தச் சின்னங்களைநீங்களும்மாற்றிஎழுதியதைப் பெரிய தவறென்று சொல்லிவிட முடியாது. ஆனாலும்தரவுப்பிழைஎன்பதால்அதனைச் சுட்டிக்காட்டினேன் என்றார்.

தவறு தவறுதான், அதற்குக் காரணங்கள் கற்பிக்க முடியாது. அதனைத் திருத்திக்கொள்கின்றேன் என்றேன் நான். அடுத்ததாக அவர் சுட்டிக்காட்டியது தரவுத் தவறு அல்ல. அது அரசியல் தவறு.

ஜனநாயகத்தமிழ்த்தேசியக்கூட்டணியில் இருக்கும்தலைவர்கள்தமதுதலைமைத்துவக் கூட்டத்திற்குமுன்பாகதனித்தனியேவெளியே பேசி வரும் விடயங்களை நம்பி நீங்கள் எழுதியிருக்கிறீர்கள். அவர்கள் உங்களையும் ஏமாற்றிவிடுவார்கள் என்றார். எனக்கு அது தெளிவாகப் புரியவில்லை. என்ன ஏது என்று விசாரித்தேன்.

தமிழ்த் தேசியக் கட்சி, புளொட் என்பன ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் இருந்து வெளியேறுவதாகத் தமது கட்சிகளுக்குள் பேசியிருப்பதை நீங்கள் எழுதியிருக்கிறீர்கள். ஆனால், அப்படிஅவர்கள் விலகிச் செல்ல மாட்டார்கள். அதற்குரிய தற்றுணிபு அவர்களுக்குக் கிடையாது. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவது அவர்கள் எப்போதுமே செய்து வருவதுதான். தங்களை உயர்த்தியும் மற்றவர்களைத் தாழ்த்தியும் அவர்கள் தம்மைச்சுற்றியிருப்பவர்களிடம்பேசுவார்கள். அதையெல்லாம் உண்மையென்று நம்பக்கூடாது. சந்தர்ப்பத்திற்கு ஏற்ப அவ்வப்போது ஏதாவது சொல்வார்கள். நீங்கள் வேண்டுமானால் இருந்து பாருங்கள் நான் சொல்வது உண்மையா இல்லையா என்பதை என்றார்.

அவர் சொன்னது உண்மைதான் என்பது நேற்று மாலையே தெரிந்துவிட்டது. 'படம் காட்டும்' பெரு முதலாளி கொழும்பில் தான் வாங்கிய கட்சியோடு இணைந்து தனது நலன்களுக்குஆதரவாகச்செயற்பட்டால்பொதுத் தேர்தலில் நிதி ஆதரவு தரலாம் என்றுகூறி அதற்காகச் செய்துகொள்ளவேண்டும் என்று தெரிவித்த உடன்படிக்கையின் பிரதியை மேசையில் வைத்துக்கொண்டு, இப்படி உடன்படிக்கை செய்து, ரணிலுடன் பின்கதவு அரசியல் செய்பவர்களுடன் சரிக்குச் சமமாக இருந்தபடி மக்களிடம் சென்று எப்படி அரசியல் செய்வது என்று கொதித்த தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர் சிறீகாந்தா, நேற்று அந்த விடயம் பற்றிக் கூட்டத்தில் பேசினாலும்கூட ஜனநாயகக் கூட்டணியிலேயே தொடர்வது என்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை 'சங்கு' சின்னத்தில் கேட்பது என்றும் இணங்கிச்சென்றிருக்கின்றார். அதுபோன்றே புளொட்டின் பவனும் கூட்டத்தில் இந்த விவகாரம் பற்றிப் பேசியபோதும் புளொட் கூட்டணியிலிருந்துவெளியேறுவதுகுறித்தோ தனித்துப் போட்டியிடுவது குறித்தோ அங்கு எதுவும் பேசவேயில்லை. பதிலாக ஏற்கனவே கூட்டணியில் இருக்கும் 5 கட்சிகளும் இணைந்து உள்ளூராட்சி சபைத் தேர்தலைக் கேட்பது என்று முடிவு செய்துள்ளனர்.

நேற்றைய கூட்டத்தில் சிறீகாந்தாவும், பவனும் இந்தக் கூட்டணிக்குள் இருந்துகொண்டே மற்றொரு கட்சிக்கு விசுவாசமாக நடப்பதாக உடன்படிக்கை செய்து பணம் பெறுவது எந்தவகையில் நியாயமானது என்று கேள்வி எழுப்பினர். அது கூட்டணித் தர்மத்திற்கு முரணானது என்றனர். ஜனநாயகப் போராளிகளும் அதனை ஆதரித்தனர். ரெலோ மற்றும் ஈபிஆர்எல்எவ் தலைவர்கள் எதுவும் பேசாமல் அமைதி காத்தனர். இதனால் இந்த விவகாரம் பெரும் விவாதமாக மாறாமலேயே அடங்கிப் போனது. நேற்றைய கூட்டத்திற்கு ரெலோவின் பொருளாளர் சுரேன் குருசாமி அழைத்து வரப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தக் கூட்டணியில் இருந்து வெளியேறி தமிழ் அரசுக் கட்சியின் முதுகில் சவாரி விடமுடியும் என்ற ரெலோ மற்றும் புளொட்டின் எதிர்பார்ப்புக்களுக்கு அந்தப் பக்கம் இருந்து சரியான, ஆதரவான சமிக்ஞைகள் வெளிப்படாததே நேற்றைய கூட்டம் அமளி துமளியின்றி முடிவடையக் காரணம் என்கிறார்கள் விடயமறிந்தவர்கள். அரசனை நம்பி அதுவும் பதிலே சொல்லாமல் இருக்கும் அரசனை நம்பி புருசனைக் கைவிடாமல் இருக்கலாம் என்ற நிலைப்பாட்டிலேயே நேற்றையகூட்டம்நடந்ததாகக்கூறப்படுகின்றது.

தமது கூட்டணிக்கு ஒரு தலைவர் இல்லாததால் ஒவ்வொரு கட்சியினரும் தத்தமதுஎண்ணப்பாட்டுக்குஇயங்குகின்றனர், கூட்டணியை ஒரு கட்டுக்கோப்புக்குள் வைத்திருப்பதானால் அதற்கொரு தலைவரை நியமிக்கவேண்டும் என்று பலரும் வலியுறுத்தினர். எனினும் இது தொடர்பில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. கட்சியின் முதலாவது மாநாட்டை வவுனியாவில் கூட்டுவது என்றும் அந்த மாநாட்டில் வைத்து தலைவர் ஒருவரைத் தெரிவு செய்வது குறித்துத் தீர்மானிக்கலாம் என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்கொள்வது குறித்து கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது. இருக்கும் கட்சிகளுக்கு மேலதிகமாக மணிவண்ணன் தரப்பும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் இந்தக் கூட்டுக்குள் சேர்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளன என்றும் அது தொடர்பாகப் பேசப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டணிக்குள்தான்வருவதாகஇருந்தால் தனக்கு செயலாளர் பதவி தரப்படவேண்டும் என்றுமணிவண்ணன்நிபந்தனைவிதித்தார் என்று சொல்லப்பட்டுள்ளது. அதற்கு அவர் தமிழ் மக்கள் கூட்டணியைச் சேர்ந்தவர், அந்தக் கட்சியின் தலைவர் முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனே, கூட்டுச் சேர்வதுகுறித்துமணிவண்ணனைவிட்டுவிட்டு விக்னேஸ்வரனுடன் பேசலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.

அதேநேரம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பிள்ளையான், வியாழேந்திரன் ஆகியோரின் கட்சிகளையும் கூட்டணிக்குள் சேர்த்துக்கொள்வது குறித்துப் பேசப்பட்டுள்ளது. ஆனால் கட்சிகளாக அவற்றை இணைத்துக்கொள்வது இல்லை என்றும் எனினும் அந்தக் கட்சிகளிலிருந்து தம்மோடு கூட்டுச் சேர்ந்து போட்டியிட வருபவர்களை ஏற்றுக்கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் ஜனநாயகத் தமிழ் அரசுக் கட்சி மற்றும் அருந்தவபாலன் ஆகிய தரப்புக்களை கூட்டணிக்குள் கொண்டுவர எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பெரிதாக வெற்றியளிக்கவில்லை என்கிற தகவலும் பரிமாறப்பட்டுள்ளது. எனினும்தேவைப்பட்டால் தொடர்ந்தும் அந்தத் தரப்புக்களுடன் பேசுவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புதிய அரசமைப்பு முயற்சி தொடர்பில் பேச வருமாறு கஜேந்திரகுமார் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதனுக்கு விடுத்துள்ள அழைப்புக் குறித்தும் ஆராயப்பட்டது. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியாக, வடக்கு கிழக்கு ஒன்றிணைந்த தாயகத்தில் தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முழுமையான சுயாட்சியை உருவாக்குவதை நோக்கி தமிழ்த் தேசியம் பேசும் மற்றைய கட்சிகளுடன் இணைந்து செயற்படலாம் என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

..........................................

ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட அரச திணைக்களங்களின் உயர்மட்ட அதிகாரிகள் இடமாற்றம் விரைவில் நிகழ இருப்பதாகத் தெரிகிறது. மாவட்டச் செயலர்கள், மாகாண தலைமைச் செயலர்கள் ஆகியோரின் பதவிகள் முதலில் மாற்றப்படவுள்ளன. யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களுக்கும் புதிய செயலாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று கூறப்படுகின்றது. அதிகாரிகளின் மாற்றங்களுடன் ஆளுநர்களையும் மாற்றுவதற்கு ஆளும்தரப்பு தயாராகி வருகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. புதிய ஜனாதிபதியாக அநுரகுமார பதவியேற்ற பின்னர்தான் புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட்டார்கள். எனினும் அவர்களை இடம்மாற்றுவது குறித்து ஆளும்தரப்புக்குள் தீவிர ஆலோசனைகள் இடம்பெறுவதாகவும் வடக்கிலும் இந்த மாற்றத்தின் தாக்கம் இருக்கும் என்றும் கூறப்படுகின்றது.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## தமிழினப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளனர்.

தமிழர்களின் இப்பாரம்பரிய வரலாறு பல ஆயிரம் வருடங்கள் பழமை வாய்ந்ததாகும். அவர்களது பாரம்பரியக் கலாசாரமானது மொழி, இசை, கலை மற்றும் உணவுப் பழக்கவழக்கங்கள் என்பவற்றின் ஊடாக வெளிப்படுகின்றது.

பாரம்பரிய நம்பிக்கைகள், குடும்பம் மற்றும் சுதந்திரம் ஆகியவற்றின் ஊடாக வழிநடத்தப்படும் கனேடியத் தமிழர்களால் இங்கு உருவாக்கப்பட்டிருக்கும் வணிக நிலையங்கள், கலாசார அமைப்புக்கள் மற்றும் சமூக ஊடக நிலையங்கள் என்பன கனேடிய சமூகத்தையும், பொருளாதாரத்தையும் சீரமைப்பதில் முக்கிய பங்காற்றியுள்ளன.

இருப்பினும்நாம்கொண்டாடும்இந்ததமிழ் மரபுரிமை மாதம் துரதிஷ்டவசமாக அதற்குரிய முழுமையான கௌரவத்தை இன்னமும் பெற்றுக்கொள்ளவில்லை. அதேவேளை மிகமோசமானதமிழினப்படுகொலையினால் பாதிக்கப்பட்ட பலர் இன்னமும் நீதிக்காகக் காத்திருக்கிறார்கள். எனவே கனேடிய கன்சர்வேட்டிவ் கட்சியினரான நாம் இந்த தமிழர் மரபுரிமை மாதத்திலும், இவ்வாண்டு முழுவதும் மேற்குறிப்பிட்டவாறான மிகமோசமான குற்றங்களுடன்தொடர்புடைய குற்றவாளிகள் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவேண்டும் என்ற எமது நிலைப்பாட்டைஉறுதியாகவலியுறுத்துவோம்.

அதேவேளை கனடாவில் வாழும் தமிழ்ச் சமூகத்தினரைக் கொண்டாடுவதில் நாம் பெருமையடைகின்றோம் எனக் குறிப்பிட்டுள்ளார்

## பிறப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணிக்கை கடந்த ஆண்டில் 28 ஆயிரத்து 91 ஆகக் குறைந்துள்ளது.

இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண ஒரு சமூக உரையாடலின் அவசியத்தை துறைசார் நிபுணரான கலாநிதி தீபால் பெரேரா வலியுறுத்துகின்றார்.

## உள்ளூராட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழு உறுப்பினர்கள் இரண்டு தடவை இணைய வழி ஊடாக பேசியுள்ளோம். இன்றைய கூட்டத்தில் வரவிருக்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் பேசினோம். அத்துடன் ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியை கிராம மட்டங்களில் பலப்படுத்தல் தொடர்பாகவும் பல்வேறுபட்ட ஆரோக்கியமான கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றன.

முக்கியமாக எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியாக தற்போது அங்கம் வகிக்கும் 5 கட்சிகளும் போட்டியிடும். அத்துடன் எம்முடன் இணைந்து பயணிக்கக் கூடிய ஏனைய தமிழ் தேசியக் கட்சிகளுடனும் பேசி அவர்களும் இணங்கும் பட்சத்தில் இணைந்து போட்டியிடவுள்ளோம்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழ் தேசியப் பரப்பில் அங்கம் வகிக்கின்ற தமிழ்க் கட்சிகளுடன் இது தொடர்பில் பேசுவதாகவும் தீர்மானங்களை எடுத்துள்ளோம். அத்துடன் எதிர்வரும் பெப்ரவரி முதலாவது வாரத்தில் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் மாநாட்டை வவுனியாவில் நடத்தவும் தீர்மானித்துள்ளோம். அதற்கு முன்னதாக மாவட்ட நிறைவேற்றுக் குழுக்கள் கூடி என்ன விடயங்கள் பேசப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கும். அதற்கான நடவடிக்கைகள் உடனடியாகவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புதிய ஒரு அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்த வேண்டிய தேவையும் பொறுப்பும் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணிக்கு இருக்கிறது. தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் என்பது சரியான முறையில் முன்னெடுக்கப்படவேண்டும் என்பதில் நாம் ஆணித்தரமான கருத்துக்களைக் கொண்டிருக்கின்றோம் - என்றார்.

## யாழ் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெயசிங்க தெரிவித்தார்.

யாழ். நகரில் புத்தாண்டுக்கு முன்னிரவு இளைஞர் ஒருவர் மீது நடத்தப்பட்ட கொலைவெறித் தாக்குதல் தொடர்பாக கேள்வியெழுப்பியபோது மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த வாரத்தில் யாழ் நகரில் நடைபெற்ற வன்முறைச் சம்பவம் பொதுமக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. குறித்த சம்பவம் தொடர்பில் நான்கு குற்றவாளிகளைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் முற்படுத்தி இருக்கின்றோம். இரண்டு சம்பவங்கள் குறித்தும் புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

மிகுதியானசந்தேகநபர்களைக்கைதுசெய்து நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளையும் எடுத்துள்ளோம். இதற்குரிய ஆலோசனைகள் என்னால் பொலிஸ் உயரதிகாரிகளுக்கும் பொறுப்பதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களைப் பிடித்து குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் 81ஆவது பிரிவின் கீழ் வழக்குத் தாக்கல் செய்து வருகின்றோம்.

இனிவரும் காலங்களில் குறித்த நபர்கள் அவ்வாறான குற்றச்செயல்களில் ஈடுபடாமல் இருப்பதற்காக கட்டுக்கோப்பான சட்டப்பிரிவின் கீழ் வழக்குப் பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆணையை பெற்று வருகின்றோம். குறித்தநபர்கள் எதிர்வரும் காலங்களில் தொடர்ந்தும் குற்றச் செயல்களில் ஈடுபட்டால் அதிக தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றஆணையின்அடிப்படையில்குற்றவியல் சட்டக்கோவையின் 81ஆவது பிரிவின் கீழ் வழக்கு தாக்கல் செய்து வருகின்றோம் - என்றார்.

## வாகனங்களில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலங்களில் இந்த நடைமுறை மிகத் தீவிரமாகப் பின்பற்றப்படும் என்றும் பொதுப் போக்குவரத்து வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள இத்தகைய சட்டவிரோதப் பொருள்கள் தொடர்பில் ஜனவரி 19இற்குப் பின்னர் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இதற்காக பொதுப் போக்குவரத்துப் பேருந்துகளில் பொருத்தப்பட்டுள்ள சட்டவிரோதப் பொருட்கள் தொடர்பில் முகவர்கள் மூலம் தகவல்கள் சேகரிக்கப்படும் என்றும் ஜனவரி 19 வரை இது தொடர்பில் சாரதிகளுக்கும் பொதுமக்களுக்கும் இது தொடர்பில்அறிவூட்டநடவடிக்கைஎடுக்கப்படும் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## சுண்ணக்கல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றுமதி செய்யப்படுகின்றது. அனுமதிக் கப்பட்ட ஆழத்திற்கும் அதிகமாக சுண்ணக்கல் அகழப்படுவது சுற்றுச்சூழலுக்கு ஆபத்து என்று சூழல் ஆர்வலர்கள் எச்சரிக்கின்றனர். ஆனால், தாம் முறைப்படி கனியவளத் திணைக்களம் மற்றும் அரச திணைக்களங்களில் அனுமதி பெற்றே இந்தக்கல் அகழ்விலும் ஏற்றுமதியிலும் ஈடுபடுகின்றோம் என்று இந்தத் தொழிலில் உள்ள வர்த்தகர்கள் கூறுகின்றனர்.

இந்த நிலையில் அண்மையில் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன்ஏ—9வீதியில்சுண்ணக்கற்களை ஏற்றிச் சென்றுகொண்டிருந்த வாகனத்தை மறித்து அதனைப் பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தார். இதையடுத்து, அந்த வாகனத்திற்குரிய வர்த்தகர் நாடாளுமன்ற உறுப்பினர் மீது பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்திருந்தார்.

இதனால் மீண்டும் சர்ச்சையாகியுள்ள இந்த விவகாரம் தொடர்பில் அமைச்சர் சந்திரசேகரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டதை அடுத்து அவர் நேற்று களத்திற்கு நேரில் சென்று நிலமையைப் பார்வையிட்டார்.

இந்தப்பிரச்சினையில், சுண்ணக்கல்லுடன் கைப்பற்றப்பட்ட லொறி தொடர்பில் கனிய வள திணைக்களத்தின் அறிக்கை பெறப்பட்ட பின்னர் விரைவில் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வோம் என்று யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காளிங்க ஜெயசிங்க தெரிவித்தார்.

''சுண்ணக்கல் அகழ்வு என்பது பொலிஸாருக்கு பொறுப்பான காரியம் அல்ல. அது கனிய வளங்கள் திணைக்களத்துடன் சம்பந்தப்பட்டது. இது தொடர்பில் கனிய வளங்கள் திணைக்களமே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிலநாட்களுக்குமுன்சாவகச்சேரிபொலிஸ் நிலையத்தில் சுண்ணக்கற்களுடன் வாகனம் ஒன்றுஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. அதற்குரிய ஆவணங்கள், அறிக்கைகள் அனைத்தும் கனிய வளங்கள் திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர், விரைவில் அதனை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்வோம்" என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# குமார் பொன்னம்பலத்தின் 25ஆவது ஆண்டு நினைவு

## யாழ். நகரில் நேற்று பெரு நிகழ்வு

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 25வது ஆண்டு நினைவு தினம் நேற்று யாழ். நகரில் உள்ள கலைத்தூது மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் 'மக்கள் மயப்படுத்தப்படவேண்டிய அரசியல்' என்ற தலைப்பில் நினைவுப் பேருரையும் இடம்பெற்றது.

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் புதல்வனும் நாடாளுமன்ற உறுப்பினரும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தினால் பொதுச்சுடர் ஏற்றப்பட்டது. தொடர்ந்து குமார் பொன்னம்பலத்தின்திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதோடு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

நினைவுப் பேருரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் ரகுராம் ஆற்றினார். நிகழ்வில் இலங்கை தமிழ் அரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சுகாஷ், பேராசிரியர்கள், ஊடக நிறுவனங்களின் நிர்வாக இயக்குனர்கள், பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

குமார் பொன்னம்பலம் 2000 ஆண்டு ஜனவரி 5 கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண வீதியில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.












# சம்மாந்துறை பிரதேச சபையில் 2025 கடமை தொடக்க நிகழ்வு

(பர்வீஸ்)

கிளீன் ஸ்ரீலங்கா தேசிய நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்து, சம்மாந்துறை பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள் 2025ஆம் வருடத்தில் கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு சம்மாந்துறை பிரதேச சபையின் செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் காலை 8.30 மணிக்கு பிரதேச சபை செயலாளரால் தேசியக்கொடி ஏற்றப்பட்டு, தேசிய கீதம் இசைக்கப்பட்ட, பின்னர் நாட்டின் நிரந்தர சமாதானத்திற்காக உயிர்நீத்த படைவீரர்களுக்காக இரு நிமிடம் மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இதனை தொடர்ந்து அலுவலக பிரதான கேட்போர் கூடத்தில் ஒன்று கூடிய பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள், ஜனாதிபதி செயலகத்திலிருந்து வெகுசன ஊடகங்கள் மூலமாகவும் ஒலி ஒளிபரப்பப்படும் 'க்ளீன் ஸ்ரீலங்கா ' தேசிய நிகழ்ச்சி திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் தேசிய விழாவுடன் இணைந்து, புத்தாண்டில் நாட்டின் எதிர்கால சுபிட்சத்துக்காக, ஒருங்கிணைந்து பணியாற்ற, சத்திய பிரமாணம் செய்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பிரதேச சபையில் கடமையாற்றும் அனைத்து உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.







# கல்முனை, அக்கரைப்பற்று மாநகர ஆணையாளர்கள் கடமையேற்பு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகரசபையின் புதிய ஆணையாளராக ஏ.ரி.எம். றாபி அவர்களும் அக்கரைப்பற்று மாநகர சபையின் புதிய ஆணையாளராக என்.எம். நௌபீஸ் ஆகியோர் தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டனர்.

இதன்போது குறித்த மாநகர சபைகளின் உத்தியோகத்தர்களால் அவர்கள் வரவேற்கப்பட்டனர்.

கல்முனை மாநகரசபையின் புதிய ஆணையாளரான ஏ.ரி.எம். றாபி இதற்கு முன்னர் அக்கரைப்பற்று மாநகர ஆணையாளராக கடமையாற்றி வந்துள்ளார்.

அவ்வாறே அக்கரைப்பற்று மாநகரசபையின் புதிய ஆணையாளரான என்.எம். நௌபீஸ் இதற்கு முன்னர் கல்முனை மாநகர ஆணையாளராகவும் கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பிரிவு பணிப்பாளராகவும் கடமையாற்றி கடமையாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.





காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உறைக்கும் உண்மை

இலங்கையில் முறைமை மாற்றம் [சிஸ்டம் சேஞ்ச்] ஒன்றை எதிர்பார்த்தே மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தார்கள் என்பதை ஆளும்தரப்பினரே ஒத்துக்கொள்கிறார்கள். அத்தகைய மாற்றத்தை தாம் நிகழ்த்தித் தருவோம் என்று தேர்தல்களுக்கு முன்னராக அவர்கள் வாக்குறுதியளித்தார்கள். தேர்தல் மேடைகள் வாக்குறுதிகளால்நிறைந்திருந்தன. ஆனால், இதற்குமுந்தையஆளும் தரப்புகளைப் போன்றே இந்த ஆளும்தரப்பும் தனது வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறுகின்ற நிலையையே காண்கின்றோம். நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை வழங்கி ஆட்சி அதிகாரத்தைப் பிடிக்கும் இலங்கையின் அரசியல் முறைமையைல் எந்த மாற்றமும் இல்லை என்பதையே தற்போதைய சூழ்நிலைகள் எடுத்துக்காட்டுகின்றன.

குறிப்பாகஅத்தியாவசியப்பொருட்கள்மீதானவரிகள்குறைக்கப்படும் என்ற வாக்குறுதி நிறைவேற்றப்படுவதற்கான அறிகுறியே இல்லை. இன்னும்சொல்லப்போனால் இலங்கையர்களின் பிரதான உணவான அரிசியின் விலைகூ-ட தொடர்ந்து அதிகரித்துக்கொண்டேசெல்கிறது. இறக்குமதி செய்யும் அரிசியின் விலையும் வரி காரணமாகக் குறைவதற்கானசாத்தியங்களைக்காணவில்லை. ஆனால், உணவுப் பொருட்கள் மருந்துப் பொருட்கள் மீதான வரிகள் குறைக்கப்பட்டு அவற்றின் விலைகள் குறைய வழி வகை ஏற்படுத்தப்படும் என்று ஆளும் தரப்பினர் தேர்தலின் போது வாக்குறுதி மழையாகப் பொழிந்தனர்.

'ஒரு செழிப்பான தேசம், அழகான வாழ்க்கை' என்பதே ஆட்சியாளர்கள்வழங்கியவாக்குறுதி. துரதிர்ஷ்டவசமாகபெரும்பாலான சந்தர்ப்பங்களில், ஆளும்தரப்பின் வாக்குறுதிகள்அதனது நடவடிக்கைகளுடன் பொருந்திப்போகவில்லை.

பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் இலங்கையின் மக்கள் தொகையில் சுமார் 25% பேர் ஒரு நாளைக்கு மூன்று வேளையும் உணவைப் பெற முடியாத நிலையிலேயே இருக்கின்றனர் என்தை ஆளும்தரப்பு நன்கு அறிந்திருக்கிறது. பல பெற்றோர்கள் தங்கள் உணவை ஒரு நாளைக்கு ஒருவேளை மட்டுமே உட்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். ஆனால், அத்தியாவசியப் பொருட்களின் விலையைக் குறைக்க அரசால் முடியவில்லை.

பதிலாக, மோசமாகப் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கான மாதாந்த அரச கொடுப்பனவை ரூ.10,000 முதல் ரூ. 15,000 வரை அதிகாரிப்பதாக ஆளும்தரப்பு அறிவித்துள்ளது. ஆனால் இந்தப் பணத்தை ஆளும்தரப்பால் வழங்க முடியுமா என்பது கேள்விக்குரியது. காலபோகச்செய்கை முடிவடையப்போகின்றது. ஆனால்விவசாயிகள் அனைவருக்கும் உர மானியம் வழங்கப்படவில்லை. அதனை வழங்குவதற்கு ஆளும்தரப்பிடம் பணம் இல்லை என்பதே பிரச்சினை. ஆளும்தரப்பு தனது அன்றாடச் செலவுகளுக்கே அங்கும் இங்குமாகப் பணத்தைப் வறுகி எடுக்கின்ற நிலையிலேயே இருக்கின்றது. இந்த நிலையில் வறியவர்களுக்கான கொடுப்பனவை அதிகரிப்பதாகக் கூறுவது ஏமாற்று நாடகமாகத்தான் இருக்கமுடியும்.

தேர்தலுக்குமுந்தையமற்றொருவாக்குறுதிமூத்தகுடிமக்களுக்கான பராமரிப்பு கட்டமைப்புகளை மேம்படுத்துவதாகும். துரதிர்ஷ்டவசமாக, வங்கி நிலையான வைப்புக்கள் [எஃப்டிகள்] மீதான வரியை உயர்த்துவது மூத்த குடிமக்களுக்குப் பேரிடியாக அமைந்துள்ளது. உண்மையில் அவர்களின் வருமானம் இந்த வரியால் மேலும் குறையப் போகின்றதே தவிர, அதிகரிக்கப்போவதில்லை.

தங்களது மொத்த சேமிப்பை அல்லது ஊழியர் சேமலாப நிதியத் தொகையை வங்கி வைப்பாக வைத்து அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை நம்பி வாழும் முதியவர்கள் பல லட்சம் பேர் இருக்கிறார்கள். ஆளும்தரப்பின் முடிவு அவர்களின் வாழ்க்கையை அந்தரத்தில் நிறுத்தியுள்ளது.

இதுதான் இலங்கையர்களுக்கு இதுவரையிலும் கிடைத்துவந்த வாழ்க்கை. இதில் தாம் மாற்றத்தை ஏற்படுத்துவோம் என்று கூறித்தான் தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தது. ஆனால், அதன் நடத்தைகள் மக்களைப் பேரச்சத்திற்குள் ஆழ்த்துகின்றன.

இதனாலேயே, மக்களுக்கு சுமையாக இருக்கும் வரிகளை நீக்குவதாக தெரிவித்து அதிகாரத்துக்கு வந்த தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு தற்போது, முன்னைய ஆட்சியின் அனைத்து வரிகளையும் அவ்வாறே பேணுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதைக் கண்டித்து மக்கள் இப்போதே ஆளும்தரப்புக்கு அழுத்தம் தரவேண்டும் என்கிறார் மக்கள் போராட்ட அமைப்பின் நிறைவேற்றுச் சபை உறுப்பினர் துமிந்த நாகமுவ தெரிவித்தார்.

"விசேட வர்த்தக வரிகள் காரணமாக அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை பெருமளவில் அதிகரிக்கப்படுகிறது. அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மீது விதிக்கப்பட்டிருக்கும் வரிகளை நீக்குவதாக தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு தேர்தல் மேடைகளில்வாக்குறுதி வழங்கி இருந்தது. அதேபோன்று பாடசாலை உபகரணங்கள் மற்றும் அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் மீது விதிக்கப்பட்டிருக்கும் வரிகளை நீக்குவதாகவும் தெரிவித்திருந்து.

வழங்கிய வாக்குறுதிகளுக்கு முற்றிலும் மாறான விடயங்களே தற்போது செயற்படுத்தப்படுகின்றது. மக்களும் சற்று பா றுத்துப்பார்ப்போம் என்று தெரிவித்துக்கொண்டு, கழுத்து இறுகும் வரை பார்த்துக்கொண்டிருக்கக்கூடாது. தற்போதே இந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வை பெற்றுக்கொள்ள ஆளும்தரப்புக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்'' என்கிறார் அவர். அதில் உண்மையில்லாமல் இல்லை.



# மத்திய கிழக்கில் ரஷ்யாவின் வீழ்ச்சி சிரியாவில் ராணுவ தளங்கள் மூடல்?

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

2024 டிசெம்பர் மாத தொடக்கத்தில் பஷர் அசாத் ஆட்சியின் விரைவான கவிழ்ப்பு ரஷ்யாவிற்கும் மத்திய கிழக்கில் அதன் செல்வாக்கை விரிவுபடுத்தும் அதன் லட்சியங்களுக்கும் ஒரு பெரும் அடி இதற்கு முக்கிய காரணம் அரபு வசந்தங்களாக எகிப்து, லிபியா, யேமனில் ஆட்சி மாற்றங்கள் நிகழ்ந்தின. அரபுவசந்தம்தான் அரபு, ஆபிரிக்க நாடுகளின் பேரழிவையும் விளைவித்தது. இறுதியாக சிரியாவில் உள்நாட்டு யுத்தம் பாரிய அழிவைச் சந்தித்து நிற்கிறது.

### கிரெம்ளினின் நீண்ட கால கூட்டாளி:

கிரெம்ளின் அரசின் நீண்ட கால கூட்டாளியான ஜனாதிபதி பஷர் அல்-அசாத் பதவியில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னர், சிரிய பிரதேசத்தில் ரஷ்யாவின் விமான மற்றும் கடற்படை தளங்களின் தலைவிதி கேள்விக்குறியாக உள்ளது.

ரஷ்யா தனது சிரிய தளங்களில் இருந்து பின்வாங்கிறது என்பதனை மாஸ்கோ அரசு மறுத்துள்ளது.

சிரியாவில் ரஷ்யாவிற்கு இரண்டு முக்கிய இராணுவ தளங்கள் உள்ளன. மத்தியதரைக் கடலோரத்தில்உள்ளடார்டஸ்(Tartus)கடற்படை தளம் உள்ளது.

அத்துடன் லதாகியா துறைமுக நகரத்திற்கு அருகிலுள்ளக்மெய்மிம்விமானதளம்உள்ளது. அவை கிரெம்ளினின் மிகவும் மூலோபாய முக்கியத்துவம்வாய்ந்தஇராணுவப்புறக்காவல் நிலையங்களாகக் கருதப்படுகின்றன.

ரஷ்யாவிற்கு மத்தியதரைக் கடலுக்கான ஒரே நேரடி அணுகல் மற்றும் கடற்படை பயிற்சிகள்,போர்க்கப்பல்கள்மற்றும்அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களை நடத்துவதற்கான தளம் ஆகியவற்றை வழங்குகிறது. இதனால் டார்டஸ் தளம் குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.




அல்-அசாத் மற்றும் அவரது குடும்பத்தினர் ரஷ்யாவில் அடைக்கலம் கொடுத்துள்ளது என்று தெரிவித்துள்ளது.

### சிரியா கிளர்ச்சி படை மாஸ்கோவுடன் புதிய ஒப்பந்தம்?

சிரியாவுடன் தற்போதய புதிய கிளர்ச்சியாளர்கள் அரசுடன்புதியஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக மாஸ்கோ தளங்களின் தலைவிதியைப் பாதுகாத்துள்ளதாக ரஷ்ய அரசு ஊடகம் கூறியுள்ளது.

ரஷ்யாவின் ஹெமிமிம் (லுஜூதுளஷ்துஷ்து புஷ்ஷ யழிவிள) மற்றும் டார்டஸ் தளங்களில் இருந்து தற்காலிகமாக விலகுவதாகக் மேற்குலக சார்பு செய்திகள் வந்தன. குறிப்பாக உக்ரேனிய உளவுத்துறை, ரஷ்யா தனது ஆயுதங்கள்மற்றும்இராணுவ உபகரணங்களை சிரிய தளங்களில் இருந்து வெளியேற்றுகிறது எனவும் தெரிவித்தது.




சிரியாவில் இருந்து பின்வாங்க, ரஷ்யர்கள் இராணுவ போக்குவரத்து விமானங்களை நிலைநிறுத்தியுள்ளனர். அவை மீதமுள்ள துருப்புக்கள், ஆயுதங்கள் மற்றும் இராணுவ உபகரணங்களை ஏற்றுகின்றன என்று உக்ரைனின் இராணுவ புலனாய்வு நிறுவனம் ஒரு அறிக்கையில் தெரிவித்தது.

அதேவேளை ராய்ட்டர்ஸின் கூற்றுப்படி, ரஷ்யாவின்டார்டஸ்தளத்தின்செயற்கைக்கோள் படங்கள் குறைந்தது மூன்று போர்க்கப்பல்கள் துறைமுகத்தை விட்டு வெளியேறி கடற்கரையிலிருந்து 13 கிமீ தொலைவில் கடலில் நங்கூரம் இட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

வருடத்தின் இறுதியில் எடுக்கப்பட்ட செயற்கைக்கோள்படங்கள்ரஷ்யகப்பல்களான 'அட்மிரல் கோர்ஷ்கோவ்' போர்கப்பல், 'அட்மிரல் கிரிகோரோவிச்' போர் கப்பல், 'நோவோரோசிஸ்க்' நீர்மூழ்கிக்கப்பல், துறைமுகத்திற்கு மேற்கேஎட்டு கிலோமீட்டர் தொலைவில் நிறுத்தப்பட்டுள்ளன என்றும் கூறப்பட்டது.

ஆயினும் ரஷ்யாவின் போர்க்கப்பல்கள் இன்னமும் டார்டஸ் தளத்தில் உள்ளன என்று ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் கூறியுள்ளார்.

### ஒரு கட்டாய பின்வாங்கல் ?

சிரியாவில் இராணுவப் பிரசன்னத்தை இழந்தது ரஷ்யாவிற்கு பெரும் பின்னடைவாக அமையும். புவியியல் ரீதியாகவும், மூலோபாய ரீதியாகவும், மாஸ்கோ இராணுவச் சொத்துக்களை ஆப்பிரிக்க நாடுகளுக்குக் கொண்டுசெல்லும் ஒரு முக்கியமான தளமாகும்.

சிரியாவில் ரஷ்ய தளங்களை இழப்பது

தொடர்ச்சி 5ம் பக்கம்...........


# மத்திய கிழக்கில் ...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

குறிப்பாக லிபியா, சஹாரா ஆப்பிரிக்காவில் ரஷ்யாவின் செயல்பாடு சக்தியை பலவீனப் படுத்தும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

அசாத்தின் ஆட்சியின் விரைவான கவிழ்ப்பு ரஷ்யாவிற்கும் மத்திய கிழக்கில் அதன் செல்வாக்கை விரிவுபடுத்தும் அதன் லட்சியங்களுக்கும் ஒரு பாரிய அடியை அளித்துள்ளது.

கிளர்ச்சியாளர்கள் டமாஸ்கஸைக் கைப்பற்றிய மின்னல் வேகம், உக்ரைன் போரில் ரஷ்யா கவனம் செலுத்துவதால், கிரெம்ளினின் உறுதியான ஆதரவு இல்லாதது ஓரளவுக்குக் காரணம்.



சிரியாவில் அசாத் ஆட்சியின் வீழ்ச்சி எவரும் கற்பனை செய்ததை விட மிக விரைவாகவும் இரத்தக்களரி குறைவாகவும் இருந்தது. குறிப்பாக ரஷ்யாவும் ஈரானும் அசாத்திற்கு ஆதரவளிக்கும் என்ற நம்பிக்கையே முன்பு அடிப்படையில் இருந்தது.

### அரபுலக ஆட்சி மாற்ற விளைவு :

துனிசியாவில் 2010ஆம் ஆண்டு அன்றைய ஆட்சியாளருக்கு எதிராக மல்லிகைப் புரட்சி என்ற பெரும் கிளர்ச்சி வெடித்து ஆட்சி மாற்றத்தை நிகழ்த்தியது. இப்படியாக ஆரம்பித்த அரபு வசந்தம் தான் அரபு நாடுகளிலும, ஆப்பிரிக்க நாடுகளிலும் பல ஆட்சி அதிகாரத்தை மாற்றியது.

அரபு வசந்தங்களாக எகிப்து, லிபியா, யேமனில் ஆட்சி மாற்றங்கள் நிகழ்ந்தின. அரபு வசந்தம் தான் அரபு, ஆப்பிரிக்க நாடுகளின் பேரழிவையும் விளைவித்தது.



இறுதியாக சிரியாவில் உள்நாட்டு யுத்தம் பாரிய அழிவைச் சந்தித்தது. இந்த அரபு வசந்தத்தின் தாக்குதலுக்கு அல்ஜீரியா, ஈராக், ஜோர்டான், குவைத், மொராக்கோ, சூடானும் தப்பவில்லை. சவூதி, ஓமன், மேற்கு சகாராவிலும் சாடையாக அரபு வசந்தம் எட்டிப் பார்த்து ஓய்ந்தது.

### அரபு வசந்தத்தின் பின்னராக

ரஷ்யாவிற்கு மத்திய கிழக்கில் நிலவும் கடுமையான இராணுவ சமநிலை கீழ் நோக்கி சென்றுள்ளது. மத்தியதரைக் கடலுக்கான ஒரே நேரடி அணுகல் மற்றும் கடற்படை பயிற்சிகள், போர்க் கப்பல்கள் மற்றும் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களை நடத்துவதற்கான தளம் சிரியாவில் இருந்து தற்போது பின்வாங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. சிரியாவில் இராணுவப் பிரசன்னத்தை இழப்பது ரஷ்யாவிற்கு பெரும் பின்னடைவாக அமையும்.

புவியியல் ரீதியாகவும், மூலோபாய ரீதியாகவும், மாஸ்கோ இராணுவச் வளங்களை ஆபிரிக்க நாடுகளுக்குக் கொண்டு செல்லும் ஒரு முக்கியமான தளமாகும். டார்டஸ் தளம் குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படும் கடற்படை தளம் மேற்குலகின் கட்டுப்பாட்டில்உடனடியாகசெல்லாவிடினும், இஸ்லாமிய அடிப்படைவாத சக்திகள் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வர முயல்வர்.

அத்துடன் ரஷ்யாவின் ஆபிரிக்க சார்பு நாடுகளின் நட்புறவு தொடர்புகளை சீர்குலைக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.





காலைக்கதிர்
Kalaikkathir

# சிறைக்கைதிகளை நீதிமன்றங்களுக்கு அழைத்துவருவதில் புதிய நடைமுறை

## சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக்கைதிகளை இரும்பு சங்கிலியால் பிணைத்து நீதிமன்றத்துக்கு அழைத்து வருவதற்கு பதிலாக அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்து புதிய நடைமுறையை பின்பற்ற எதிர்பார்த்துள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் காமினி பிதிசாநாயக்க தெரிவித்தார்.

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கபட்டுள்ளவர்களும் மனிதர்கள் எனவும் அவர்களை விலங்குகளை போன்று சங்கிலியால் பிணைத்து நீதிமன்றத்திற்கு அழைத்து வர வேண்டாம் என்றும் கொழும்பு மேலதிக நீதிவான் பசன் அமரசேன சிறைச்சாலை அதிகாரிகளுக்கு அண்மையில் கடுமையாக எச்சரிக்கை விடுத்திருந்தார்.

அவ்வாறு சந்தேகநபர்களை நீதிமன்றத்துக்கு அழைத்து வந்து மன்றில் முன்னிலைப்படுத்துவதை தாம் விரும்பவில்லை என்றும் அவர்களை மனிதர்களாகவும் மதித்து செயற்படுங்கள் என்றும்நீதிவான்சிறைச்சாலைஅதிகாரிகளை வலியுறுத்தியிருந்தார்.

இந்நிலையில் எதிர்காலத்தில் சிறைக்கைதிகளை மன்றில் முன்னிலைப் படுத்தும் போது பின்பற்றப்படவுள்ள வழிமுறை தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் -

நீதிமன்றுக்குள் சந்தேகநபர்களை இரும்பு சங்கிலியால் பிணைத்து முன்னிலைப்படுத்தியமை தவறாகும். அதனை நாம் ஏற்றுக் கொள்கிறோம். அதேபோன்று நீதிமன்றத்தின் உத்தரவுக்கு நாம் மதிப்பளிக்கிறோம். குறிப்பாக சந்தேகநபர்களை ஒன்றாக நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லும் போது இரும்பு சங்கிலியால் பிணைத்து அழைத்துச் செல்ல வேண்டி ஏற்படும்.

காரணம் அவர்கள் பொலிஸ் காவலில் இருந்து தப்பிச் செல்வதற்கு வாய்ப்பு அதிகம் உள்ளது.எனினும் இந்த முறைமையைய மாற்றிபுதியநடைமுறையைபின்பற்றுவதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம். அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்து அதற்கான மாற்று வழி தொடர்பில் நாம் நிச்சயம் ஆராய்வோம். - என்றார்.

# யாழில் நிமோனியா தொற்றால் உயிரிழந்த இளம் குடும்பஸ்தர்

நிமோனியா தொற்று காரணமாக யாழ்ப்பாணத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் சனிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

புன்னாலைக்கட்டுவன் வடக்கு பகுதியைச் சேர்ந்த 42 வயதான இந்த நபர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

இவர் கடந்த 30ஆம் திகதி முதல் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தநிலையில்கடந்த வெள்ளிக்கிழமைஇரவு திடீரென உடல்நிலை மோசமாக பாதிக்கப்பட்டிருந்ததால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

அதன் பின்னர், சிகிச்சை பலனின்றி சனிக்கிழமை பிற்பகல் உயிரிழந்தார்.

நிமோனியா தொற்று ஏற்பட்டதாலேயே இந்த மரணம் நேர்ந்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனையின் ஊடாக தெரியவந்துள்ளது.

# தமிழ் அரசுக் கட்சியில் இளையோரே இணைக

## தலைவர் சிவஞானம் பகிரங்க அழைப்பு

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் அதிகமான சபைகளை கைப்பற்றுவதில் இலங்கைத் தமிழரசுக்கட்சி தீவிரமான கவனத்தினைச் செலுத்தியுள்ளதாக அக்கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கட்சியை அடுத்த சந்ததிக்கு உரியவாறு கையளிப்பதற்காக இளையோரில் அதிகளவானவர்கள் எம்முடன் இணைந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் பகிரங்கமான அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாக கருத்து வெளியிடும்போது தான் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கைத்தமிழரசுக்கட்சிக்குள் உள்ளக முரண்பாடுகள் காணப்படுகின்றன என்பதற்கு அப்பால் வடக்கு,கிழக்கு மக்களின் பெரும்பான்மையான அங்கீகாரமும் ஆதரவும் கட்சிக்கே உள்ளது என்பது கடந்த காலத் தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

அந்த வகையில் வடக்கு, கிழக்கில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் ஆளுகையைப் பெறும் நோக்குடன் கட்சி அடுத்தகட்டச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

இதற்காக கட்சியில் இளைய சந்ததியினரையும், பெண்களையும் இணைந்து கொள்ளுமாறு பகிரங்;கமான கோரிக்கை விடுகின்றேன். கட்சியின் அனைத்துப் பின்னடைவுகளையும் கடந்து எமது பிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய வேண்டியது மிகவும் அவசியமான விடயமாகும்.

ஆகவே, எதிர்கால சந்ததியினர் கட்சியுடன் கரம்கோர்த்துக்கொள்வதன் ஊடாகவே கட்சியில் உண்மையான மாற்றம் ஏற்படும். அந்த வகையில் உள்ளூராட்சி தேர்தலில் புதிய முகங்களை உள்ளீர்த்துக்கொள்வதற்கு கட்சி தயாராகவே உள்ளது. - என்றார்.

# கஜேந்திரகுமாரின் தீர்வுத் திட்ட பேச்சு முயற்சிகள் தமிழ் அரசுக் கட்சியை மலினப்படுத்துவதற்கானது

## கொழும்புக் கிளை தலைவர் கட்சியின் செயலாளருக்குக் கடிதம்

தமிழ் மக்கள் பேரவையினால் தயாரிக்கப்பட்ட தீர்வுத்திட்ட வரைவு குறித்துகஜேந்திரகுமார்பொன்னம்பலத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் பேச்சுகள் அவரை முன்னிலைப்படுத்துவதையும், தமிழரசுக்கட்சியைப் பலவீனப்படுத்துவதையும் இலக்காகக்கொண்ட உபாயம் மாத்திரமேயாகும்.

ஆகவே இவ்விடயம் தொடர்பில் அவருடன் சிறிதரன் மற்றும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேச்சுகளை முன்னெடுப்பது தமிழர் நலனுக்கோ, கட்சிக்கோ உகந்ததல்ல எனக் குறிப்பிட்டு இலங்கைத் தமிழரசுக்கட்சியின் கொழும்புக்கிளை தலைவர் சி.இரத்தினவடிவேல் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் ப.சத்தியலிங்கத்துக்குக் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு:

கடந்த 2015 - 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அனைத்துக் கட்சிகளும் 84 தடவைகள் கூடி ஓர் அரசமைப்பு வரைவைத் தயாரித்தன.

அதில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு என்ற ரீதியில் தமிழரசுக்கட்சி முழுமூச்சாக ஈடுபட்டு, அவ்வரைவில் முன்னேற்றகரமான சமஷ்டி அம்சங்கள் சேர்க்கப்படுவதற்கு உந்துதல் அளித்தது. சுமார் ஐந்து ஆண்டுகால முயற்சியின்பின்னர் அதில்உள்ளடங்கியிருந்த சிறந்த விடயங்களைக் கருத்திற்கொண்டு இரா.சம்பந்தன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் கையெழுத்திட்டனர்.

தற்போது ஆட்சியிலிருக்கும் தரப்பும் அதனை ஏற்றுக்கொண்டது. அவ்வரைவில்



அவசியமான திருத்தங்களைச்செய்து, புதிய அரசமைப்பைக் கொண்டுவருவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக தேர்தல் பிரசாரங்களின்போது இவ்வரசாங்கம் வாக்குறுதியளித்திருந்தது.

இருப்பினும் இதில் பங்கேற்காத கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தற்போது எமது கட்சியினதும், தலைவர்களினதும் ஐந்து ஆண்டுகால முயற்சியை செல்லாக்காசாக்க முயற்சிக்கிறார். அதுமாத்திரமன்றி எப்போதும் தமிழர்களின் நலன்களை விட, தமிழரசுக்கட்சியை மலினப்படுத்துவதையே முன்னிலைப்படுத்தி செயற்பட்டுவரும் அவர், இம்முன்னேற்றகரமான வரைவையும் குறை கூறினார்.

இவ்வாறானதொரு பின்னணியில் தற்போது அவர் இந்த வரைவைப் புறந்தள்ளி, சி.வி.விக்கினேஸ்வரன் தலைமையில் தயாரிக்கப்பட்ட வரைவை முன்னிலைப்படுத்த முற்படுகிறார். அந்த வரைவில் உள்ள யோசனைகளைத் தமிழரசுக்கட்சி எப்போதுமே ஏற்றுக்கொண்டதில்லை.

இந்நிலையில் தமிழரசுக்கட்சிக்குள் நிலவுவதாகக் கருதப்படும் உள்ளக முரண்பாடுகளை மேலும் தீவிரப்படுத்தும் நோக்குடன் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கட்சியைப் புறந்தள்ளி, நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனுடன் பேச்சுகளை நடத்துவதற்கு முற்படுகிறார்.

எனவே தமிழ் மக்கள் பேரவையால் தயாரிக்கப்பட்ட தீர்வுத்திட்ட வரைவு குறித்து கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் பேச்சுகள் அவரை முன்னிலைப்படுத்துவதையும், தமிழரசுக்கட்சியைப் பலவீனப்படுத்துவதையும் இலக்காகக்கொண்ட உபாயம் மாத்திரமேயாகும்.

ஆகவே இவ்விடயம் தொடர்பில் அவருடன் சிறிதரன் மற்றும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேச்சுகளை முன்னெடுப்பது தமிழர் நலனுக்கோ, கட்சிக்கோ உகந்ததல்ல என்பதைக் கருத்திற்கொள்ளவேண்டும் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# எமது தனிப்பட்ட அரசியல் நலன்களுக்காக தமிழர் நலனை பகடைக்காயாக்க முடியாது

## தமிழ் அரசுக் கட்சி செயலாளர் சத்தியலிங்கம் திட்டவட்டம்

புதிய அரசமைப்பு உருவாக்கம் என்று வருகிறபோதுஏற்கனவேதயாரிக்கப்பட்ட வரைவு உள்ளடங்கலாக மேலும் பல முன்மொழிவுகள் மற்றும் வரைவுகள் இருக்கின்றன.

எனவேதமிழ்த்தேசியக்கட்சிகள்ஒன்றிணைந்து அவையனைத்தையும் ஆராய்ந்து, அவற்றில் உள்ள சிறந்த விடயங்களை உள்ளடக்கி, எமது அடிப்படைக் கோட்பாட்டில் இருந்து விலகாமல், தற்கால சூழலுக்கு ஏற்றவாறான புதிய முன்மொழிவொன்றை ஒருமித்துத் தயாரிக்கவேண்டும் என இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பதில் பொதுச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.



இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பதில் பொதுச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கத்துக்கு அக்கட்சியின் கொழும்புக்கிளைதலைவர் சி.இரத்தினவடிவேல் வெள்ளிக்கிழமை கடிதமொன்றை அனுப்பிவைத்திருக்கிறார்.

அக்கடிதத்தில், தமிழ் மக்கள் பேரவையால் தயாரிக்கப்பட்ட தீர்வுத்திட்ட வரைவு குறித்து கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் பேச்சுகள் அவரை முன்னிலைப்படுத்துவதையும், தமிழரசுக்கட்சியைப் பலவீனப்படுத்துவதையும் இலக்காகக்கொண்ட உபாயம் மாத்திரமே எனவும், ஆகவே இவ்விடயம் தொடர்பில் அவருடன்சிறிதரன் மற்றும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேச்சுகளை முன்னெடுப்பது தமிழர் நலனுக்கோ, கட்சிக்கோ உகந்ததல்ல எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாகக் கட்சியின் செயலாளர் சத்தியலிங்கத்திடம் வினவியபோது, தமிழர் பிரச்சினை என்று வருகிறபோது அது பொதுவானதொரு விடயமாகும். எனவே தமிழர் பிரச்சினைக்கான தீர்வு குறித்து சகல தமிழ்த்தரப்புக்களும் ஒன்றிணைந்து தான் செயற்படவேண்டும். அதுவே எமது கட்சியின் நிலைப்பாடாகும் என விளக்கமளித்தார்.

அதேவேளை புதிய அரசமைப்பு உருவாக்கத்தின்போது தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் ஒருமித்து செயற்படுவதை இலக்காகக்கொண்டு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் முயற்சியை வரவேற்பதாகத் தெரிவித்த அவர், அதுகுறித்த பேச்சுகளில் பங்கேற்பதற்குத் தாம் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டார்.

இருப்பினும், தமிழர்களுக்கான அரசியல் தீர்வு குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரம் ஒன்றிணைந்து தீர்மானிக்கமுடியாது. எனவே இவ்விடயத்தில் எட்டப்படும் இணக்கப்பாடு என்பது தமிழ்த்தேசிய கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையிலானதாகவன்றி, தமிழ்த்தேசிய கட்சிகளுக்கு இடையிலான இணக்கப்பாடாக இருக்கவேண்டும். இங்கு தனிப்பட்ட அரசியல் நலன்களுக்காக தமிழர் நலன்களைப் பகடைக்காயாக்க முடியாது எனவும் சத்தியலிங்கம் தெரிவித்தார்.

அத்தோடு புதிய அரசமைப்பு உருவாக்கம் என்று வருகிறபோது ஏற்கனவே தயாரிக்கப்பட்ட வரைவு உள்ளடங்கலாக மேலும் பல முன்மொழிவுகள் மற்றும் வரைவுகள் இருப்பதாகச் சுட்டிக்காட்டிய அவர், எனவே அவையனைத்தையும் ஆராய்ந்து, அவற்றில் உள்ள சிறந்த விடயங்களை உள்ளடக்கி, எமது அடிப்படைக்கோட்பாட்டில் இருந்து விலகாமல், தற்கால சூழலுக்கு ஏற்றவாறான புதிய முன்மொழிவொன்றை ஒருமித்துத் தயாரித்து அரசாங்கத்திடம் கையளிக்கவேண்டும். - என்றார்.

# மாமனிதர் குமார் பொன்னம்பலத்திற்கு வவுனியாவிலும் நேற்று நினைவுதினம்

=மாமனிதர் குமார்பொன்னம்பலத்தின் 25 ஆவது நினைவுதினம் தமிழர்தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் நேற்று காலை அனுஷ்டிக்கப்பட்டது.

அவர்கள் போராட்டம் மேற்கொள்ளும் வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாகவுள்ள கொட்டகையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது அன்னாரது படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர். 100








# முன்பள்ளி பாடசாலையின் வித்தியாரம்ப நிகழ்வுகள்

(றிபாஸ்)

மருதமுனை ஹவுஸ் ஓப் இங்கிலிஸ்(ஆங்கில முன் பள்ளி பாலர் பாடசாலையின்)11 ஆவது வித்தியரம்ப நிகழ்வு பாடசாலையில் இடம் பெற்றது.

முகாமைத்துவ பணிப்பாளர் ஜெஸ்மி எம் மூஸா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிபாளர் ஜிஹானா ஆலிப் பிரதம அதிதியாகவும், முகாமையாளரும், சிரேஷ்ட ஆசிரியையுமான சுமைய்யா, மாணவர்களின் பெற்றோர்கள், விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

மகிழ்ச்சியான பாடசாலை ஆரம்பத்திற்கான செயற்பாடுகள் உட்பட மாணவர்களின் கலை நிகழ்வுகளும், ஆற்றல்களை வெளிப்படுத்தும் போட்டி நிகழ்வுகளும் இடம் பெற்றன.







காலைக்கதிர் Kalaikkathir

## யானையின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிகள் திணைக்களம் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்தது.

இந்த விசாரணைகளின் பயனாக நேற்று மூன்று இராணுவச் சிப்பாய்களும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் இன்று வவுனியா நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (100)

## வரிகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்படுத்தப்படுகின்றது. மக்களும் சற்று பாறுத்துப்பார்ப்போம் என்று தெரிவித்துக்கொண்டு, கழுத்து இறுகும் வரை பார்த்துக்கொண்டிக்கக்கூடாது. தற்போதே இந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வை பெற்றுக்கொள்ள ஆளும்தரப்புக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்றார்.

## 2025இல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிசெம்பர் 31 வரை சுற்றுலா பயணிகளின் வருகை இலக்கான 2 மில்லியனை எட்டியுள்ளோம். அதனால் இந்த வருடம் அந்த எண்ணிக்கையை 3 மில்லியன் வரை அதிகரித்துக்கொள்வதே எமது இலக்கு.

சுற்றுலாவிகளின் வருகை அளவை அதிகரிப்பது போன்று சுற்றுலா பகுதிகளின் முன்னேற்றத்தையும்தீவிரப்படுத்தவேண்டும். சுற்றுலாத் துறையின் தரத்தை அதிகரிப்பதன் மூலமே உலகில் உயர்ந்த மதிப்பில் இருக்கும் சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்கு அழைத்துவரமுடியும்.

ஆயுர்வேத மூலிகை, எமது சம்பிரதாய, கலாசார உரிமைகள் மற்றும் உணவு பழக்க வழக்கங்கள் என அனைத்தும் சுற்றுலா பயணிகளுக்கு அனுபவிக்க கிடைக்கிறது. திறந்துவைக்கப்பட்டுள்ள ஆயுர்வேத மருத்துவ நிலையமானது சுற்றுலா பயணிகளை மிகவும் கவரமுடியுமான துறையாகும். சுற்றுலாத்துறை என்பது வெறுமனே கைத்தொழில் மாத்திரமல்ல.

எமது நாட்டின் பிரதிபலிப்பு, எமது நாட்டின் கலாசாரம், எமது நாட்டின் வரலாறு. இந்த மூன்று விடயங்களையும் சுற்றுலாப் பயணிகளுக்கு குறுகிய காலத்தில் அனுபவிக்க முடியுமாகிறது. அதேபோன்று எமது வரலாற்றை உலகுக்கு கொண்டு செல்லும் மத்திய நிலையமாகவும் சுற்றுலாத்துறை திகழ்கிறது.

ஆயுர்வேத மருத்துவம் எமது நாட்டின் தனித்துவமான மருத்துவ முறையாகும். எமது நாட்டின் தேசிய உரிமையை மேலும் முன்னேற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆயுர் வேதம் உடலியல் சுகாதாரத்துக்கு மாத்திரமல்ல மனோ ரீதியான ஆரோக்கியத்துக்கும் சிறந்ததாகும்.

சுற்றுலாத்துறையை கிராம மக்களுடன் தொடர்புபடுத்தி முன்னேற்ற வேண்டும் என்பதே எமது நோக்கமாகும். அப்போதுதான் கிராமிய மக்களின் வாழ்க்கை முறையை சுற்றுலா பயணிகளுக்கும் அனுபவிக்க முடியும். அதேநேரம் கிராம மக்களுக்கும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற வழி ஏற்படும்.

அத்துடன் சில நாடுகளில் இருந்து வரும் சுற்றுலா பயணிகள் சுற்றுலாவுக்காக மாத்திரமின்றி இங்கு வியாபார நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றனர். இது இந்தக் காலத்தில் நாங்கள் எதிர்கொண்டுவரும் பெரும் பிரச்சினையாகும். சுற்றுலா விசாவில் வருகின்றன ஒரு சிலரே எமது சுற்றுலா கைத்தொழில் துறைகளில் அந்த இடத்துக்கு உரித்தான வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். நாங்கள் எமது சுற்றுலா கைத்தொழிலை உயர் தரத்தில் மேற்கொள்ளவதன் மூலம் அந்த வியாபார நடவடிக்கைகளை தோற்கடிக்க முடியும் - என்றார்.

## ஆட்சி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொவு செய்யப்பட்டிருந்தாலும்கூட ஒரு மாற்றம் ஏற்படும் என்பதற்காகத்தான் அந்த வாக்குகளும் அளிக்கப்பட்டதாக நாங்கள் கருதுகிறோம்.

தமிழ் மக்கள் மத்தியில் 75 வருடமாக தேசிய இனப்பிரச்சினை புரையோடிப் போயுள்ளது. அது தீர்க்கப்படவேண்டும் என்ற ஒரு நிலைப்பாடு புதிய ஆளும்தரப்பிடம் இருக்கிறதாஎன்றகேள்விஎம்மிடம்இருக்கிறது. கடந்த 7 வருடங்களாக மாகாணசபைத்தேர்தல் நடத்தப்படவில்லை. மாகாணசபை தேர்தல் என்பது இந்த வருட இறுதியில் நடத்தப்படும் என கூறுகிறார்கள். மாகாண சபைத் தேர்தல் தாமதமாக நடத்தப்படுவதற்கான தேவை இருக்கிறதா. அல்லது அதற்கு முன்கூட்டியே அது நடத்தப்படலாமா போன்ற கருத்துக்கள் எம் மத்தியில் பேசப்பட்டது.

உள்ளூராட்சி தேர்தல் நடந்து முடிந்து ஓரிரு மாதங்களில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என நாம் நம்புகின்றோம். அரசமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அனைதது அதிகாரங்களும் மாகாணங்களுக்கு வழங்கப்படவேண்டும். இந்த ஆளும்தரப்பு மிக விரைவாக அந்த நடவடிக்கைகளை எடுத்தால் மாத்திரம்தான் தமிழ் மக்கள் இந்த ஆளும்தரப்பு மீது நம்பிக்கை வைக்கக் கூடிய ஒரு சூழல் ஏற்படும்.

ஆளும்தரப்பு வெறுமனே பேசிக்கொண்டிருக்காமல் தமிழ் மக்களது அபிலாசைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். ஒரு புதிய அரசமைப்புக்கொண்டுவரப்படவேண்டும். அது வெறுமனே சிங்கள மக்களது பிரச்சினையைத் தீர்ப்பதாக இல்லாது புரையோடிப் போயுள்ள தமிழ் மக்களது தேசிய இனப்பிரச்சினையைத் தீர்க்கக் கூடியதாக இருக்கவேண்டும்.

புதிய அரசமைப்பை உருவாக்குவது தொடர்பாக ஆளும்தரப்புச் சரியான அறவிப்புக்களை வெளியிடுமாக இருந்தால் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியானது அனைத்துத் தமிழ் தேசியக் கட்சிகளுடனும் இணைந்து தமிழ் மக்களது தேசியப் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக வடக்கு - கிழக்கு இணைந்த ஒரு தமிழ் மாநிலத்தை உருவாக்கி முழுமையான சுயாட்சியை உருவாக்குவதற்கான கருத்துக்கள அல்லது அறிக்கைகளை எல்லோருடனும் இணைந்து புதிய அரசமைப்பை உருவாக்கும் குழுவிடம் கொடுப்போம்.

புதிய அரசமைப்பு உருவாகும் பட்சத்தில் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைதேவை. அத்துடன் அது மக்கள் மத்தியில் வாக்கெடுப்புக்கும் விடப்படவேண்டும். அவ்வாறு விடப்பட்டால்தான் அது நிறைவு பெறும். மக்கள் மத்தியில் சென்று அதற்கான ஆதரவைத் திரட்ட வேண்டுமாக இருந்தால் இந்த ஆளும்தரப்பு விரைவாக புதிய அரசமைப்பை உருவாக்க வேண்டும். அப்போதுதான் அது சாத்தியமாகலாம். காலம் செல்ல ஆட்சியின் மீதும், ஆட்சி அதிகாரம் மீதும் பல்வேறு குறைகள் வரும். அதற்கு முன்பாக அரசமைப்பு வரவேண்டும் என விருப்புகின்றோம்.

அதில் முக்கியமாக தமிழ் மக்களது தேசியப் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக, தமிழ் மக்கள் இந்தமண்ணில் முழுமையான சுயாட்சியோடு வாழ்வதற்கு தேவையான விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவேண்டும் என நாம் பேசியுள்ளோம். இது தொடர்பில் ஏனைய தமிழ் தேசிய கட்சிகளுடன் பேசுவதற்குத் தீர்மானித்துள்ளோம் - என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சித்தார்த்தன், சுரேஸ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன், கருணாகரம், சிறிகாந்தா, சிவாஜிலிங்கம், வேந்தன், பவான் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (100)

# அரசியல் கைதிகள் விடுதலையை வலியுறுத்தி யாழில் கையெழுத்து

## இன்று முதல் போராட்டம் தொடக்கம்

சிறைச்சாலைகளில் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி யாழ்ப்பாணத்தில் இன்று திங்கட்கிழமை கையெழுத்துப் போராட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

விசாரணைஎனும் பெயரில் நீண்ட காலமாகச் சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி போராளிகள் நலன்புரிச் சங்கம் பல்வேறு இடங்களிலும் கையெழுத்துப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றது.

இதன் தொடராக இன்று காலை 10 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இந்துப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளது.

இதற்கமையயாழ் ஆயர்இல்லத்துக்கு அருகாமையில் இன்று ஆரம்பிக் கப்படுகின்ற இந்தக் கையெழுத்துப் போராட்டம் நாளையும் நாளைமறு தினமும் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் முன்னெடுக்கப்படவுள்ளது.

சிறையில் வாடும் உறவுகளின் விடுதலையை வலியுறுத்தி முன்னெடுக்கப்படுகின்ற இந்தப் போராட்டத்தில் அரசியல் பேதங்களைக் கடந்து அனைவரையும் கலந்துகொள்ளுமாறு போராளிகள் நலன்புரிச் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது

# இலங்கைப் பல்கலை விவாத அணி மலேசியாவில் இறுதிக்குத் தெரிவு



மலேசியாவில் உள்ள திரங்கானு பல்கலைகழகம் நடாத்தும் அனைத்துலக வானரங்க சொற்போர் போட்டியில் இலங்கை சார்பாக பங்குபற்றிய அணி இறுதிப்போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

இவ் விவாதப் போட்டிக்கு யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைகழக மாணவர்களை கொண்ட அணி அறிவியல் தமிழ் அணி இறுதிப்போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

இவ்வணி முதல் மூன்று சுற்றுக்களிலும் இந்தியா, சிங்கபூர், மலேசிய அணிகளுடன் போட்டியிட்டு தற்போது இறுதி சுற்றுக்கு தெரிவாகியுள்ளது. இறுதி சுற்று இந்தியாவுடன் இடம்பெறவுள்ளது.

இலங்கைசார்பில் பங்குபற்றி அணியில் மோகனராஜ் ஹரிகரன், கிளிநொச்சியைச் சேர்ந்த நகுலகுமார் அபிராமி, கலைச்செல்வன் யூலியட், சிவகுமார் திசான் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர். 113

# பாலர் பாடசாலை விளையாட்டு விழா






(றிபாஸ்)

நிந்தவூர் பிரதேச சபையின் வழிகாட்டலின் கீழ் இயங்கி வரும் அல் ஹிக்மா முன்பள்ளி பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா பாடசாலை மைதானத்தில் சனிக்கிழமை இடம்பெற்றது.

பிரதேச சபையின் செயலாளர் எஸ். ஷிஹாபுத்தீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் திகாமாடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் பிரதம அதிதியாகவும், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்களான சட்டத்தரணி ஏ. எல்.றியாஸ், ஏ அஸபர் உட்பட பெற்றோர்கள் மற்றும் பாடசாலையின் அபிவிருத்தி குழுவினர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

மாணவர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தும் நோக்கில் போட்டி நிகழ்வுகளும், கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றதுடன் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு அதிதிகளினால் நினைவு சின்னங்களும், சான்றுதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

காலைக்கதிர்
Kalaikkathir

# திருவெம்பாவையும் மார்கழியும்

மகாதேவஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ் மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண் .. ஆஸ்திரேலியா

மார்கழி மாதத்தைப் பீடை பிடித்தமாதம் என்று சொல்லி - சுபநிகழ்ச்சிகள் செய்வதைத் தவிர்த்து விட்ட நிலையினைக் காண்கின்றோம். இது பற்றிய விளக்கத்தை நாம் அறிந்து கொள்ளுதல் அவசியமானதே. பல பெயர்கள் காலத்தின் போக்கால் கருத்து மாறுபட்டு வேறு ஒரு பொருளை உணர்த்துவது நடந்தே வந்திருக்கிறது.' ஒப்பிலி அப்பன்' என்னும் சுவாமியின் பெயரை உப்பிலி அப்பன் என மாற்றி - அந்த சுவா மிக்கு உப்பில்லாத பொருட்களையே நிவேதனம் செய்யும் வழக்கம் நாளடைவில் ஏற்பட்டுவிட்டது.அதே போன்றதே மார்கழி மாதம் பற்றியதுமாகும்.' பீடுடைய மாதம்' என்பதுபீடை உடையமாதமாக்கப்பட்டுவிட்டது.பீடு என்றால் பெருமையானது, உயர்வானது என்பது பொருளாகும்.



திருவாதிரை நட்சத்திரம் ' ஆருத்ரா ' என சமஸ்கிருதத்தில் வழங்கப்படுகின்றது.சிவனையும் ஆதிரை யான் எனக் குறிப்பிடும் வழமையும் எமது சமயத்தில் இருக்கிறது.மார்கழியில் வரும் திருவாதிரை நட் சத்திரதுக்கு முந்திய பத்து நாட்களும் திருவெம்பாவையாகக் கருதி திருவாதிரை இடம் பெறும் பத்தாம் நாளை ' ஆருர்த்தா ' தரிசனம் எனப் போற்றி சிவனை வழிபடும் வழக்கமும் இந்த மார்கழிக்கே உரியது என்பதும் முக்கியமானதாகும்.அதுமட்டுமல்ல சம்பந்தப் பெருமான் அவதாரம் செய்ததுகூட மார்கழித் திரு வாதிரை என்றும், சேந்தனார் திருப்பல்லாண்டு பாடி அசையாத தேரை அசையச் செய்து சிவனது தேரினை வலம்வரச் செய்ததும் மார்கழித்திருவாதிரை என்றும், வியாக்கிரபாதர்.. பதஞ்சலி ஆகிய சிவனருள் பெற்ற முனிவர்களுக்குச் சிவன் தனது அருட் கூத்தினை நிகழ்த்திக் காட்டியதும் கூட மார்கழித் திருவாதிரையி ல்த்தான் என்றும் அறியக் கிடக்கின்றது. இந்த வகையிலும் மார்கழி மாதம் முக்கியத்துவம் மிக்கதாகவும் கொள்ளப் படுகின்றது.

மனிதர்களுக்குஒருவருடம்என்பது தேவர்களுக்கு ஒரு நாளாகும்.தை முதல் ஆனிமாத இறுதிவரை பகல்.ஆடிமுதல் மார்கழி மாத இறுதிவரை இரவு. இந்த இறுதியானது தேவர்களுக்கு விடியற்காலமாகு ம்.இதனால் மார்கழி என்பது தேவர்களின் விடியற் பொழுதாக இருப்பதால் அக்காலங்களில் காலையில் எழுந்து குளித்து,அனைவரும் பூஜை வழிபாடுகளை ஆற்றுவது மிகவும் நலனை விளைவிக்கும் என்பது நம்பிக்கையாகும்.இதனால்த்தான் மார்கழி மாதம் தேவ காரியங்களுக்கு என்று ஒதுக்கப்பட்டது. இந்தக் காலத்தில்த்தான் மார்கழி நோன்பும் வருகிறது. மணிவாசகப் பெருமானின் திருவெம்பாவையும் பாடப் படுகிறது.ஆண்டாளின் திருப்பாவையும் பாடப்படுகிறது. திருப்பள்ளி எழுச்சியும் பாடப்படுவதும் குறிப் பிடத்தக்கது.தேவர்களுக்கு மட்டுமே உரிய மாதத்தில் வேறு எந்தவிதச் சிந்தனைகளுக்கும் இடம் கொடு க்கும் வண்ணம் ஏனைய விஷயங்களைச் செய்தல் தவிக்கப்பட்டதே அன்றி மார்கழி கூடாதது என்பதற் காகவோ மார்கழி பீடை பிடித்தது என்பதற்காகவே அல்ல என்பதை நாங்கள் யாவரும் நன்கு விளங்கிக் கொள்ளுதல் மிகவும் அவசியமாகும்.

' மாதங்களிலே நான் மார்கழி ' என கண்ணன் பகவத்கீதையில் சொல்லு வதை மனத்தில் கொண்டால் மார்கழியின் மகத்துவம் யாவருக்கும் விளங்கி விடும்.வடமொழியில் ' மார்கசீர்ஷம் ' என்று மார்கழி மாதம் அழைக்கப் படுகிறது.' மார்க்கம் ' என்றால் வழி என்பது பொருள். ' சீர்ஷம் ' என்றால் உயர்ந்த என்பது பொருள்.எனவே மார்கழி என்பது உயர்வுடையது என்பதை வடமொழியும் கூட எடுத்துக் காட்டுகி றது அல்லவா?

திருவண்ணாமலையில் மணிவாசகரால் பாடப்பட்டதுதான்'திருவெம்பாவை'. திருவெம்பாவைப் பாடல்கள் அனைத்துமே கன்னிப் பெண்களால் பாடப்படும் விதத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றது. இப்படியாகப் பாடும் பாடல் வகைகள் சங்ககாலத்திலேயே இருந்திருக்கிறது. பரிபாடல், நற்றிணை, ஐங்குறுநூறு, கலித்தொகை ஆகிய சங்ககால நூல்களில் மார்கழி நோன்பு பற்றிய செய்திகள் இடம்பெறுகின்றன. இங்கு பாவை நோன்பு பற்றிய செய்திகளையும் காண்கின்றோம்.எனவே மணி வாசகப் பெருமானின் பாவையர் பற்றிய இந்தவகையானது முந்தியும் இருக்கலாம் அல்லது பிந்தியதாகவும் இருக்கலாம் என்ற கருத்தும் இலக்கிய ஆராய்ச்சியாளரிடம் காணப்படுகின்றது. எது எப்படி இருப்பினும் - மார்கழி நோன்பு என்பது திருவெம் பாவையுடன் இணைகின்றது என்பதே முக்கிய செய்தி எனலாம்.

' திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார் ' என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப் பட்டதாகும்.மேல்நாட்டிலிருந்து இந்தியா வந்த டாக்டர் ஜி.யூ. போப் என்னும் ஆங்கிலேயரின் மனத்தைத் தொட்டதே இந்தத் திருவாசம்தான். தனது மனத்தைப் பறிகொடுத்த திருவாசகத்தை ஆங்கில மொழியில் மொழிமாற்றம் செய்தார் என்பதை யாவரும் அறிகின்றோம்.அந்த அளவுக்கு ஆத்மாவையே உருக்கி ஆண் டவனின் நினைப்பை ஊட்டவல்லது திருவாசகம் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை என்பது எல்லோரதும் அவிப்பிராயமாகும்.

அந்தத்திருவாசகத்துக்குள் அமைந்திருப்பதுதான் ' திருவெம்பாவை ' ஆகும்.விடியற்காலையிலே எழுந்த கன்னிப்பெண்கள் வீடுதோறும் சென்று இறைவனது பெருமையினை எடுத்துச் சொல்லி இன்னும் ஏன் நித் திரை செய்கின்றாய் விரைவாக எழுந்துவா எல்லோரும் நீராடி இறைவனது புகழை ஏத்திப் பாடுவோம் என்று பக்தி ததும்ப அழைக்கும் விதத்தில் அமைந்ததுதான் ' திருவெம்பாவை ' என்பது குறிப்பிடத்தக்கது.

திரு + எம் + பாவை என்பது திருவெம்பாவை ஆகும்.தெய்வத்தை நோக்கிய பக்தி நிலையில் நின்று பாடும் பாடல்கள் என்பதே இதன் அர்த்தம் எனவும் கொள்ளலாம்.ஒவ்வொரு பாடலின் முடிவிலும் ' ஏலோர் எம்பாவா ' என்றே முடிகின்றதைக் காண்கின்றோம்.இதனைப் பாவைப் பாட்டு என்றும் நீராட்டுப் பாட்டு என்றும் குறிப்பிடுவார்கள்.

இளம்பெண்கள் தங்களுக்கு நல்ல கணவர் அமைய வேண்டும் எனக்கருதி மார்கழிமாதத்தில் நோன்பு நோற்பது வழக்கம்.இந்தப் பெண்கள் அதிகாலை எழுந்து இறைவனது புகழைப்பாடி நீராடச் செல்லும் போது ' திருவெம்பாவை ' பாடல்களைப் பாடிச்சென்றுள்ளனர் என்பதையே இங்குநாம்எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது.இதற்கு ஆண்டாள் நாச்சியாரின் திருப்பாவையும் சான்றாகி நிற்கிறதெனலாம்.

இதனால்த்தான் சைவத்தலங்களில் ' திருவெம்பாவையும் ' வைஷ்ணவத் தலங்களில் ' திருப்பாவையும் ' மார்கழிமாதத்தில் பாடப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.


முதல்நான்கு பாடல்களும் அதிகாலையில் நீராடப் புறப்பட்ட பெண்கள் இன்னும் நித்திரைவிட்டு எழாத தமது தோழியரை எழுப்புவதாக , அதற்கு அப்பெண்ணானவள் மறுமொழி கூறுவதாகவும் அமைந்திரு க்கின்றது.

ஐந்தாம் பாடல் தொடக்கம் எட்டாம் பாடல் வரை உள்ளன நித்திரை விட்டெழும் பெண்கள் கூறும் வித மாக இருக்கின்றன.

ஒன்பதாம் பாடல் முதல் இருபதாம் பாடல் வரை நித்திரை கலைந்த பெண்கள் இறைவனைத் துதித்துப் பாடும் வகையில் அமைந்திருக்கின்றன.

'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி ' ' மாலறியா நான்முகனும் காணா மலையினை ' ' என்னானை என் அரையன் இன்னமுது என்று எல்லோமும் சொன்னோம் கேள் ' கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை'

' முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே - பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற் றியனே ' 'இவ்வானும் குவலயமும் எல்லோரும் - காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி'



'வேதப்பொருள் பாடி அப்பொருளாம் மாபாடி
சோதி திறம்பாடி சூழ்கொன்றைத் தாழ்பாடி
ஆதி திறம்பாடி அந்தமாம் மாபாடிப் பேதித்து '

'விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக் - கண்ணார் அமுதமுமாய் நின்றான் ' என்று திருவெம் பாவைப் பாடல்கள் - எல்லாம் வல்ல இறைவனைப் பற்றிப் பெண்கள் பாடிப் பரவுவதாக எமக்கொல்லாம் விளக்கி நிற்கின்றது எனலாம்.

திருவெம்பாவையும் திருப்பாவையும் மார்கழியில் அதிகாலை நேரத்திலே பாடும் வகையில் அமைக்கப் பட்டிருக்கின்றன. ஏற்கனவே முதலில் சுட்டிக் காட்டப்பட்ட படி தேவர்களின் காலைப்பொழுதாக இருப்பது ஒருமுக்கிய காரணம் என்பதை நம்பிக்கை எனக்கொள்வோம். அதற்குப் பின்னும் பல காரணங்களும் இருக்கின்றன என்பதும் முக்கியமானதாகும்.

அதிகாலையில் துயில் எழுவது என்பதே ஆரோக்கியத்துக் அடிப்படை அல்லவா? அதுவும் மார்கழியில் அதிகாலை துயில் எழுந்து நீராடுவது என்பது உடல் ஆரோக்கியம் சம்பந்தப்பட்டதாகும். மார்கழியில் ஏற்படும் காலநிலை மாற்றமானது உடல் ஆரோக்கியத்துக்கு உகந்தது என்று எமது முன்னோர்கள் அறிந்து வைத்திருந்தனர். அதனை அறிவுரை ஆக்கினால் யாவரும் புறந்தள்ளியும் விடக்கூடும் என்பதால் அதனை திருவெம்பாவையுடன் இணை த்துவிட்டனர் என்றே எண்ண வேண்டியிருக்கிறது.

அதிகாலையில்விழித்தால்புத்திதெளியும்.உடம்பில் இரத்தத்தில் நல்ல மாற்றம் ஏற்படும் நரம்புகழ் உற்சாகம் பெறும்.பித்தம் தணியும்.வாத, பித்தம் சமனிலை அடையும்.இவையெல்லாம் ஆரோக்கியம் சம்பந்தமானவை. இவையாயுமே திருவெம்பாவையினுள் அடங்கி இருக்கிறது என்பதே இங்கு மிகவும் இன்றியமையாத விஷயமாகும் என்பதை அறிதல் வேண்டும்.

தமிழ்ப் பண்பு, அன்புணர்வு, ஒழுக்க நிலை, சமயமரபு, ஆத்மஞானம் அத்தனையும் திருவெம்பாவால் எமக்குக் கிடைக்கின்றது என்பதை யாவரும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.வெறுமனவே திருவெ ம்பாவைப் பாடாமல் அதனூடாக எங்களுக்குக் கிடக்கும் அரிய பெரிய விஷயங்களை அறிந்து கொண்டு கோவிலில் பாடுவோமேயானால் நிச்சயம் திருவெம்பா எமக்கெல்லாம் பெரும் பயன் உடையாதாகவே இருக்கும்.

வைகறைப் பொழுதை ' பிரம்ம முகூர்த்தம் ' என்று குறிப்பிடுவதையும் நாம் நோக்குதல் வேண்டும்.

மார்கழியை பகவத்கீதை போற்றுகின்றது. மார்கழியில்த்தான்'ஆருர்த்தா'தரிசனம் நடக்கின்றது. மார்கழியில்த்தான்'சுவர்க்கவாசல்ஏகாதசி'உற்சவமும் இடம்பெறுகிறது.சைவர்களுக்கும் வைஷ்ணவர்களுக்கும் உகந்த தெய்வீக மாதமாக மார்கழி திகழ்கிறது என்பதையும் மனத்தில் கொள்ளுதல் முக்கியமானதே.திருவெம்பாவையும்,திருப்பாவையும், இறைவன் புகழ் சேர்ப் பதற்கு மார்கழியில்த்தான் கோவில்கள் தோறும் பக்தியுடன் பாடப்படுகின்றன என்பதும் மிகவும் முக்கிய கருத்து என்பதை நாம் மறந்து விடக் கூடாது.எனவே மார்கழியில் இறைவன் புகழ்பாடி எங்களின் வாழ்வு வளம்பெறப் பிரார்த்திப்போம்.

# ‘காலம் ஒரு வேட்டை விலங்கு’ நூல் வெளியீட்டு விழா நிகழ்வு

(ஷினாஸ்)

கிழக்கிலங்கையின் மருதமுனையை சேர்ந்த ஏ.ஆர். அப்துல் ஜமீல் எழுதிய ‘காலம் ஒரு வேட்டை விலங்கு’ கவிதை தொகுதி வெளியீட்டு விழா எதிர்வரும் சனிக்கிழமை மருதமுனை பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

மர்ஹூம் அப்துல் றஸாக் சேர் நிணைவரங்கில்புதுப்புணைவுபதிப்பகத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த வெளியீட்டு விழா நிகழ்வு இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் வருகைதரு விரிவுரையாளர் கலாநிதி பிர்தௌஸ் சத்தார் தலைமையில் ஓய்வு நிலை பதிவாளர் கவிஞர் மன்சூர் ஏ. காதர் முன்னிலை அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார்.

ஊவா வெல்லச பல்கலைக்கழகத்தின் பதிவாளர் எம்.எம்.ஹிபத்துல் கரீம், சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஏ.எம்.நுபைல், கிழக்கு பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் எம். எப். மர்சூக் , தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.எம்.பைறோஸ், ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் இலங்கை நிர்வாக சேவையின் முதல் தர அதிகாரி கவிஞர் எம்.எம். நௌபல், அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ.எம். ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்து கொள்ளவுள்ளனர்.



இந்த வெளியீட்டு விழா நிகழ்வின் முதன்மை பிரதிகளை மருதமுனை ஜாஹி வீவர்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் எம்.ஐ. உபைதுர் ரஹ்மான், அல்-மனார் மத்திய கல்லூரியின் உதவி அதிபர் எம்.எஸ். நிகால், திடீர் மரண விசாரணை அதிகாரி பி.பஹுட் ஸமான், மெரீடியன் கபே உரிமையாளர் எம். எச். எம்.நியாஸ் ஆகியோர் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

மர்ஹூம் அப்துல் றஸாக் சேர் நினைவு பிரதி ஏ.ஆர்.ஹிபத்துல்லாஹ் பெற்றுக் கொள்வார். நூல் மீதான வாசிப்பை தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர், எழுத்தாளர் அப்துல் றஸாக், கவிஞர் ஜிப்ரி ஹாசன், கவிஞர் டீன் கபூர் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். நிகழ்ச்சி நெறியாள்கையை எம்.எம். நாளில் நிகழ்த்துவார்.




**கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில்**

# வருடாந்த ஒன்று கூடலும் சேவை நலன் பாராட்டும்

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் நலன்புரிச் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த ஒன்று கூடலும் சேவை நலன் பாராட்டு நிகழ்வும் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் கல்முனை சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிராந்திய பிரிவுத் தலைவர்கள் பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது பல்வேறு கலை கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நீண்டகாலமாக பணியாற்றி வருடாந்த இடமாற்றம் பெற்று சென்ற பலர் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.









# 5 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்க நாபீருக்கு அரசியல் அதிகாரம் வேண்டும்

## முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் வலியுறுத்து

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்தில் 5000 வறிய குடும்பத்தை சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என்ற அடிப்படை எண்ணப்பாட்டுடன் இருக்கின்றவர் நாபீர் நற்பணி மன்ற ஸ்தாபகர் உதுமாண்கட்டு நாபீர். இவ்வாறான விடயங்களை விரைவாக முன்னெடுப்பதற்கு அரசியல் அதிகாரம் அவசியமாகும் அத்துடன் தொழில்பேட்டைகளை அமைத்து இதர வேலைவாய்ப்புகளை உருவாக்கும் முயற்சியிலும் அவர் ஈடுபட்டு வருகின்றார். இது தவிர வெளிநாட்டு முதலீட்டாளர்களை கொண்டு வீட்டுத்திட்டங்களை அமைத்து கொடுக்கும் நடவடிக்கையிலும் கவனம் செலுத்தி வருகின்றார். இதற்கெல்லாம் அரசியல் அதிகாரமானது இன்றி அமையாது என முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் சட்டத்தரணியுமான துல்கர் நயீம் (துல்சான்) தெரிவித்தார்.

நாபீர் நற்பணி மன்றத்தின் அம்பாறை மாவட்ட செயற்குழு கூட்டம் ஈ.சி.எம். நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் அங்கு கருத்து தெரிவிக்கையில் -

எதிர்காலத்தில் அம்பாறை மாவட்டத்தில் 5000 வறிய குடும்பத்தை சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என்ற அடிப்படை எண்ணப்பாட்டுடன் இருக்கின்றவர் நாபீர் நற்பணி மன்ற ஸ்தாபகர் உதுமாண்கட்டு நாபீர். இவ்வாறான விடயங்களை விரைவாக முன்னெடுப்பதற்கு அரசியல் அதிகாரம் அவசியமாகும். அத்துடன் தொழில் பேட்டைகளை அமைத்து இதர வேலைவாய்ப்புகளை உருவாக்கும் முயற்சியிலும் அவர் ஈடுபட்டு வருகின்றார். இது தவிர வெளிநாட்டு முதலீட்டாளர்களை கொண்டு வீட்டுத்திட்டங்களை அமைத்து கொடுக்கும் நடவடிக்கையிலும் கவனம் செலுத்தி வருகின்றார். இதற்கெல்லாம் அரசியல் அதிகாரமானது இன்றி அமையாதது.

எனவே இவ்வாறான மக்கள் சேவகர்களை மக்கள் இனங்கண்டு எப்படி நாடாளுமன்றம் அனுப்புவது நாபீர் நற்பணி மன்றத்தினை அரசியல் கட்சியாக மாற்றி எவ்வாறு







முன்னோக்கி செல்வது போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் அனைத்து பிரதேசங்களையும் உள்ளடக்கிய பிரமுகர்களைக் கொண்ட உயர்மட்ட ஆலோசனை சபை ஒன்றும் முடிவில் அமைக்கப்பட்டது. எதிர்காலத்தில் இன்னும் சமூக சிந்தனை உள்ள புத்திஜீவிகள் பலரும் உள்வாங்கப்பட்டு இந்த சபை இன்னும் விரிவாக்கப்படும் எனத் தெரிவித்தார்.

அங்கு கருத்து தெரிவித்த சட்டத்தரணி ஹாதி இஸ்மாயீல் சம்மாந்துறை பிரதேசத்திலே நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் ஒன்று கடந்த மூன்று நான்கு தசாப்தங்களாக வெற்றிடமாக காணப்படுகின்றது இங்கு ஆளுமை மிக்க ஓர் அரசியல் தலைமைத்துவம் இல்லாத காரணத்தால் இங்கே உள்ள வாக்குகள் பல்வேறு பக்கமும் பிரிந்து செல்கின்றது. அதனால் எந்த பிரதிநிதித்துவத்தையும் பெற்றுக்கொள்ள முடியாமல் இருக்கின்றது.

எனவே சம்மாந்துறை பிரதேசத்திலே ஓர் ஆளுமை மிக்க அரசியல் பிரதிநிதித்துவம் இல்லாமல் காணப்படுகின்றது. எனவே அதற்குப் பொருத்தமான ஓர் ஆளுமை மிக்க அரசியல் தலைமைத்துவத்தை நாங்கள் தெரிவு செய்ய வேண்டும். அந்த அரசியல் தலைமைத்துவத்தை நாங்கள் இன்று அடையாளம் கண்டிருக்கின்றோம்.

கடந்த பல வருடங்களாக, சுமார் 30 வருடங்களுக்கு மேலாக சமூக சேவையில் ஈடுபட்டு வரும் சமூக சிந்தனையாளர் கலாநிதி நாபிர் அவர்களை நாங்கள் ஒரு சிறந்த தலைமைத்துவமாக இனங்கண்டு இருக்கின்றோம்.

எனவே அவருடைய கரங்களை பலப்படுத்தி அவரை ஓர் அரசியல் அதிகாரதில் அமர்த்த வேண்டும். இவர் ஒரு சமூக சிந்தனை உள்ள ஒரு சிறந்த மனிதர். இவரை நாங்கள் நாடாளுமன்றத்துக்கு அனுப்பினால் நிச்சயமாக சம்மாந்துறை பிரதேசம் அரசியல் எழுச்சி பெற்று சமூக அபிவிருத்தியில் ஒரு சிறந்த சமூகமாக உயர்வடையும் என்பது நிச்சயம்.

எனவே எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலே போட்டியிடுவதற்கு ஏற்ற வகையிலே நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து ஓர் அரசியல் கட்டமைப்பை உருவாக்கி இந்த பிரதேச சபைகளை நாங்கள் கைப்பற்ற கூடிய சக்தியாக மாற வேண்டும். அதேபோல எதிர்காலத்திலே ஒரு கட்சியாக உருவாக்கப்பட்டு அம்பாறை மாவட்டத்தில் மட்டுமல்லாமல் ஏனைய மாவட்டங்களுக்கும் எங்களது கட்சியை பரவலாக்க வேண்டும் அது ஒரு மாபெரும் சக்தியாக உருவெடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கல்முனை சட்டத்தரணிகள் சங்கத் தலைவரும் அரசியல் செயற்பாட்டாளருமான சட்டத்தரணி ஹாதி இஸ்மாயீல் அவர்களும் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டதுடன், மேலும் பல சட்டத்தரணிகளும் புத்தி ஜீவிகளும் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினார்கள்.

அம்பாறை மாவட்டாத்தின் ஒவ்வொரு பிரிவுகளையும் சேர்ந்த 50 இற்கும் மேற்பட்ட மாதர் சங்கங்களின் செயற்குழு உறுப்பினர்களும் பெரியநீலாவனை மருதமுனை, கல்முனை, சாய்ந்தமருது அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, பொத்துவில் போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த மாதர் சங்கங்களின் தலைவர் செயலாளர்கள் உட்பட அனைவரும் கலந்துகொண்டனர்.

# 5000 ரூபாய் போலி நாணயத் தாள்களுடன் அம்பாறையில் மூன்று இளைஞர்கள் கைது



அம்பாறை-தமன, வனகமுவ பிரதேசத்தில் தொலைபேசி விற்பனை செய்யும் இடம் என்ற போர்வையில் 5000 ரூபா போலி நாணயத்தாள்களை அச்சடிக்கும் நிலையமாக இயங்கிவரும் வீடொன்று சுற்றிவளைக்கப்பட்டு, மூன்று சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூன்று இளைஞர்களும் 29 - 20 வயதுக்குட்பட்டவர்கள் எனவும், அவர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போலிநாணயத்தாள்களை அச்சடிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட மடிக்கணினி உட்பட பல உபகரணங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், அவ்வீட்டில் மூன்று ஏ4 அளவிலான கடதாசிகள், அச்சடிக்கப்பட்டு கத்தரிக்கப்படாத 10 போலியான 5000 ரூபா நாணயத்தாள்கள் முதலியவற்றையும் அதிகாரிகள் கண்டெடுத்துள்ளனர்.


# 200 போதை மாத்திரைகளுடன் மன்னாரில் இளைஞர் கைது

மன்னார் முருங்கன் பஜார் பகுதியில் 200 போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் சனிக்கிழமை முருங்கன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இராணுவ புலனாய்வு பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபர் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டார்.

விசாரணைகளின் பின்னர், கைப்பற்றப்பட்ட போதை மாத்திரைகளுடன் சந்தேக நபரை மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த முருங்கன் பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# அகதிகளாக எல்லோரும் வரமுற்பட்டால் நெருக்கடி ரோஹிங்கியா அகதிகளை மீள அனுப்ப அவதானம்

## கடல் வள அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் கூறுகிறார்

முல்லைத்தீவு விமானப்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ரோஹிங்கியா அகதிகள் விடயத்தில் நீதிமன்றத்தின் தீரப்புக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும். அந்த அகதிகள் நாட்டில் தங்கியிருக்கும் வரை தேவையான உதவிகளை மனிதாபிமான அடிப்படையில் வழங்கப்படும் எனத் தெரிவித்த கடற்றொழில், நீரியல்வளங்கள் மற்றும் கடல் வள அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், எவ்வாறாயினும் ரோஹிங்கியா அகதிகளை தொடர்ந்தும் நாட்டில் வைத்திருக்க தீர்மானத்தில் அதற்கு பின்னர் ஏற்பட கூடிய விளைவுகள் குறித்து அவதானம் செலுத்த வேணடும் எனவும் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில்-

முல்லைத்தீவுக்கு வந்த ரோஹிங்கியா அகதிகள் நாட்டில் தங்க வைத்திருக்கும் வரையில் அவர்களின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாக உள்ளது.

ரோஹிங்கியா அகதிகளை நிரந்தரமாக நாட்டில் வைத்துக்கொள்வதா, இல்லையா என்பது குறித்து நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்படுகின்ற வழக்கு தீர்ப்பின் பின்னரே தீர்மானிக்கப்படும். எவ்வாறாயினும் இலங்கையின் தீர்மானத்துக்கு அமைவாகவே ஐக்கிய நாடுகள் சபையின் ஒத்துழைப்புகள் எமக்கு கிடைக்கும்.

எவ்வாறாயினும் ரோஹிங்கியா அகதிகளை தொடர்ந்தும் நாட்டில் வைத்திருக்க தீர்மானத்தில் அதற்கு பின்னர் ஏற்படக்கூடிய விளைவுகள் குறித்து அவதானம் செலுத்த வேணடும்.

ஏனெனில் அகதிகளாக எல்லோரும் இலங்கைக்கு வர முற்படுவார்கள். இதனால் பொருளாதார ரீதியிலும் ஏனைய வகையிலும் ஏற்படக்கூடிய நெருக்கடிகள் பாரதூரமானதாக இருக்க வாய்ப்புகள் உள்ளன. மனிதாபிமான அடிப்படையில் உதவிகளை வழங்குவது யதாரத்தமானது எனக் கூறினார்.



எவ்வாறாயினும் ரோஹிங்கியா அகதிகளைமீண்டும்அவர்களதுசொந்த நாட்டிற்கு அனுப்புவது குறித்து பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அரசாங்கம் தகவல்கள் மேலும் குறிப்பிட்டன.

கடந்த டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி ரோஹிங்கியா முஸ்லிம்களை ஏற்றிச் சென்ற படகு முல்லைத்தீவில் - முள்ளிவாய்க்கால் கடற்கரையில் கரையொதுங்கியது.

இவர்கள்அனைவரும்திருகோணமலைநீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். பின்னர் 12 பேர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர். மீதமுள்ள ரோஹிங்கியா அகதிகளை மிரிஹானை குடிவரவு தடுப்பு மையத்துக்கு அனுப்ப உத்தரவிடப்பட்டது. இருப்பினும், பின்னர் அவர்கள் முல்லைத்தீவில் உள்ள விமானப்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவில் உள்ள விமானப்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 103 ரோஹிங்கியா முஸ்லிம்களை இன்னும் அகதிகளாக வகைப்படுத்தாது, ஒழுங்கற்ற குடியேறிகளாகக் கருதப்படுகிறார்கள். இது குறித்து விமானப்படை பேச்சாளர் குரூப் கெப்டன் எரந்த கீகனகே குறிப்பிடுகையில் -

முல்லைத்தீவு விமானப்படை முகாமில் 103 ரோஹிங்கியா அகதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தேவையான உணவு மற்றும் மருந்து உட்பட அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் வழங்கப்படுகின்றன.

குடிவரவு - குடியகல்வு திணைக்களம் இந்த அகதிகள் குறித்து தீர்மானங்களை எடுக்கும். ஒரு கரப்பிணிப் பெண் உட்பட 103 ரோஹிங்கியா அகதிகளை விமானப்படை பராமரித்து வருகிறது.

அவர்களுக்கு வழங்கப்படுகின்ற உணவுகள் உட்பட ஏனைய அத்தியாவசிய பொருள்களின் செலவிணங்களை குடிவரவு - குடியல்வு திணைக்களம் செய்கிறது. திணைக்களம் வழங்கும் பட்டியலுக்கு அமைய உணவை நாங்கள் வழங்குகின்றோம் என கூறினார்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.01.2025இல் வெளியிடப்பெற்றது